20-10-1992 மாலை 5-00 மணிக்கு மன்னார் மறைவட்டத்தின் மடுப்பதியில் அரும்பும் இரண்டாம் 'ஆயர் மலர்'

பாதுகாவலன்
PATHUKAVALAN

* மலர்: 118 இதழ் : 23 16—10—1992 இலங்கையின் ஒரே தமிழ் கத்தோலிக்க வார ஏடு விலை ரூபா 10-00


பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்றம்
* 20-10-1992
யாழ்ப்பாணம்

# "நமக்கு ஒரு மகன் தரப்பட்டுள்ளான்.

## ஆட்சியின் பொறுப்பு அவருடைய தோள்மேல் இருக்கும்

## அவருடையபெயரோ, வியத்தகு.... அமைதியின் மன்னன்"

(இசை. 9: 6)



பதினொரு ஆண்டு வளர்ச்சி பெற்றுள்ள மன்னார் மறைவட்டத்தின் இரண்டாவது ஆயராக அருட்திரு. இராயப்பு யோசவ் அடிகளார் மடுத்திருப்பதியில் அக்டோபர் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருநிலைப்படுத்தப் படுகின்றார். 1981 ஜனவரி 24ஆம் திகதி வரை யாழ் மாவட்டத்தின் ஒரு பகுதியாயிருந்த மன்னார் மறைவட்டத்தின் ஆயராகவிருந்து தற்போது யாழ். மறைவட்ட ஆயராக பதவியேற்கும் பேரருள்திரு. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் இடத்தில் இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய ஆயர், யாழ்ப்பாணத்தின் தென் மேற்கு திசையில் 35 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளதும் குடியிருப்புள்ள இலங்கைத் தீவுகளில் சேய்மையில் உள்ளதுமான நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கரடுமுரடான தன்மை, இயற்கை வளக்குறைவு, நவீன வசதிகளின்மை, போக்குவரத்துக் கஷ்டம், வெளிச்செல்லும் பிரயாணத்திலுள்ள ஆபத்துக்கள் இவை யாவற்றினாலும் அங்குள்ள மக்கள் தப்பிப் பிழைத்து உயிர் வாழ்வதற்கும் வளர்ச்சியடைவதற்கும் கடினமாக உழைக்க வேண்டியிருக்கிறது. அங்கு செல்லும் ஒருவர் காணும் காட்சிகள், நற்செய்தியில் இயேசு தம் அப்போஸ்தலர்களை அழைத்த இடங்களை நினைவூட்டுகின்றன.

இவர் தமது பெற்றோருக்கு நான்காவது புதல்வராக 1940, ஏப்ரல் 16ம் திகதி பிறந்தார். இவரது தந்தையாரான

(தொடர்ச்சி 11 ஆம் பக்கம்)



பேரருள்திரு இராயப்பு ஞானானந்தர் யோசவ்

# முன்னாள் ஆயர்களின் ஆசிச்செய்தி

## அன்பையும் ஆறுதலையும் வழங்கும் நல்லாயன்



யாழ். மறைவட்டத்தில், பல்லாண்டுகளாகப் பணியாற்றிய மறைவட்டக்குரு இராயப்பு யோசவ் அவர்களை மன்னார் மறைவட்டத்தின் இரண்டாவது ஆயராகத் தொண்டாற்ற அழைத்தமை இறைவன் எம் மீது கொண்டிருக்கும் பேரன்புக்கும், கருணைக்கும் சிறந்த அடையாளமாகும்.

நல்லாயராகிய கிறிஸ்துவின் முப்பணிகளாகிய இறைவாக்கு, குருத்துவ, அரசபணிகளில் ஆழமாகப் பங்கு கொண்டு, மன்னார் மறைவட்டத்தில் திருப்பணியாற்ற இக்கட்டான காலகட்டத்தில் பேரருள்திரு. இராயப்பு யோசவ் அவர்கள் அழைப்பைப் பெற்றுள்ளார்.

எங்கும் இன்னல்கள் நிறைந்த இன்றைய சூழ்நிலையில், பயங்கர விளைவுகளாற் பாதிக்கப்பட்டு வருந்தும் 'மக்கள் மத்தியில், அன்பையும், ஆறுதலையும் வழங்கும் நல்லாயனாக, நற்செய்தியின் மதிப்பீடுகளை நன்குவிளக்கும் இறைவாக்கினனாக இறைபணியிலும், சமூகசேவையிலும் இவர் இணைந்து செயலாற்ற, இறையருளை இறைஞ்சுகின்றேன்.

இறையன்புப் பரிபாலனமும், குருக்கள், கன்னியர்கள் மக்களின் ஒத்துழைப்பும் இவருக்கு நிறைவாகக் கிடைக்கவும் இவர் கையிடுங் கருமங்கள் சிறக்கவும் இதயங்கனிந்து வாழ்த்துகிறேன்.

\+ வ. தியோகுப்பிள்ளை

## மிக்க தாழ்மையுடன் பணிபுரிய விருதுபூண்ட ஆயர்



இறை சித்தத்தினாலும், திரு ஆட்சிப்பீடத்தின் பணிப்பின்படியும் இப்பொழுது எனது பணிக்களத்திற்கு புதிய ஆயராக நியமனம் பெற்றிருக்கும் சகோதரர் பேரருட் திரு இராயப்பு யோசேவ் ஆண்டகையை வரவேற்று இந்த வாழ்த்துரையை வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

யான் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பெற்ற புனித செபமாலை மரியன்னையின் மடுத்திருப்பதியிலேயே ஏனைய ஆயர்களுடன் ஒன்றிணைந்து, புதிய ஆயரைத் திருநிலைப் படுத்தும் பேற்றினை அருளினமைக்காக இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

வேதசாட்சிகளின் இரத்தத்தினால் புனிதம் பெற்றதும், மரியன்னையின் மருதமடுத் திருப்பதியைத் தன்னகத்தே கொண்டுள்ளதுமாகிய மன்னார் மறைவட்டத்திற்கு 'மிக்க தாழ்மையுடன் ஊழியஞ் செய்ய, விருது பூண்டுள்ள புதிய ஆயர் அவர்கள், பல துறைகளிலும் அறிவாற்றல், அனுபவமுதிர்ச்சி, உயர்தகைமைகள், குணநலன்கள் வாய்க்கப் பெற்றவர் என்பதனை யாவரும் அறிவர். நலிவுற்றிருக்கும் எமது பிரதேசத்தில், சொல்லொணாத் துன்பங்களுக்கு உள்ளாகியிருக்கும் எமது மக்கள், புதிய ஆயருடைய அன்பின் ஆட்சியில் ஆன்ம – சரீர – பொருளாதார – மற்றும் சமூக நலன்களினால் பொலிந்து நலம்பெற இறைவன் அருள் பாலிப்பாராக.

\+ தோமஸ் சவுந்தரநாயகம்

# எம்கருத்து

## தாழ்மையுடன் பணிபுரிய

**''ஆண்டவர் படைத்த நாளிதுவே, அகமகிழ்ந்து களிகூர்வோம்.''**

அக்டோபர் திங்கள் 20ஆம் நாள் செவ்வாய் கிழமை. மடுத்திருப்பதியில் அருட்திரு. இராயப்பு ஞானானந்தர் யோசேவ் புதிய மன்னார் மறைவட்ட ஆயராக திருநிலைப்படுத்தப்படும் பெருநாள்.

திருநிலைப்படுத்தப்படும் எந்த ஒரு ஆயரும் தலத் திருச்சபைக்கு மட்டுமல்லாமல், உலகத் திருச்சபை முழுமைக்குமே மறைபணியாற்ற அபிஷேகம் பெறுகின்றார் என்பதைப் பிரதிபலிப்பதைப்போல், புதிய ஆயரை திருநிலைப்படுத்தும் திருச்சடங்குகளுக்கு, யாழ். ஆயராக புதிதாக நியமனம்பெற்ற பேரருள் திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையேற்று நிற்க, இலங்கையின் திருப்பீடத்தூதுவர் பேரருட்திரு பிரான்சுவா பக்கே ஆண்டகை, கொழும்பு மறைமாவட்ட பேராயரும் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவருமாகிய பேரருட்திரு நிக்கிலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை வலப் பக்கமும் இடப்பக்கமும் நிற்க, இலங்கையின் ஏனைய மறைவட்டங்களின் ஆயர்கள் புடைசூழ, இப்புனிதமான வைபவம் நடைபெறுகின்றது.

திருநிலைப்படுத்தும் திருச்சடங்குகளின் முக்கிய கட்டங்களான, தலையின்மீது ஆயர்கள் அனைவரும் கரங்களை வைத்தல், தொடர்ந்து வரும் மன்றாட்டும் செபமும், தலைமீது பரிசுத்த எண்ணையால் அபிஷேகம் செய்தல், நற்செய்தி நூல், செங்கோல் அளித்தல் போன்ற சடங்குகள் புதிய ஆயரின் அர்ச்சிப்பினதும் பணிக்குரியதுமான அறிகுறிகளாக அமைகின்றன.

ஆயரின் பணிகளை மூவகைப்படுத்தலாம்: போதிக்கும் பணி (ஆசிரியப் பணி), அர்ச்சிக்கும் பணி (குருத்துவப் பணி), ஆளும்பணி (மேய்ப்புப் பணி).

திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவின் நற்செய்தியைப் போதிக்க கடமை பெற்றுள்ளான். ஆனால் திருச்சபையின் இந்தப் போதிக்கும் பணியை செவ்வனே ஆற்ற ஆயர்கள் பெரும் பொறுப்பைப் பெறுகின்றனர். இதைக் காட்டவே நற்செய்தி நூலானது புதிய ஆயருக்கு திருநிலைப் பாட்டுச் சடங்கில் கொடுக்கப்படுகிறது.

பலி செலுத்தும் பணி திருச்சபையில் குருக்கள் பலர் செலுத்தினாலும் ஆயர் ஒருவரே குருத்துவத்தின் முழுமையைப் பெற்று பெரிய குருவாக செயற்படுகின்றார். இதைக் குறித்துக்காட்டவே ஆயரின் சிரசு பரிசுத்த தைலத்தால் அர்ச்சிக்கப்படுகிறது.

இறுதியாக இயேசுகிறிஸ்துவின் மந்தையை நல்வழியில் நடத்திச் செல்லும் ஆயராக பணி ஏற்கின்றார். இதன் அடையாளமாகவே செங்கோல் ஆயருக்கு அளிக்கப்படுகின்றது.

திருச்சபைக்கும், சிறப்பான வகையில் இலங்கைக்கும், தீந்தமிழ் ஈழத்திற்கும், அதிலும் மன்னார் மறைவட்டத்திற்கும் ஆயர் யோசேவ் ஆண்டகை மகத்தான மறைபணியாற்றுவார் என்பது எல்லோரினதும் எதிர்பார்ப்பு. இது வெறும் கனவாக நின்றுவிடாது, செயலில் நிறைபேறும் என்பதற்கு அவரின் கடந்தகால அருள் வளம் மிகுந்த குருத்துவபணியும், அவர் தற்பொழுது மேற்கொள்ளும் விருதுவாக்கும்— Ministrare in Humilitate: **மிக்க தாழ்மையுடன் ஊழியஞ் செய்ய** — நம்பிக்கையூட்டும் அச்சாணியாக உள்ளது.

எளிமையும், கடின உழைப்பும் அவரது இரு கண்கள். அவ்விரு கண்கள்தான் அவரை உயர்வுப் பாதையின் உச்சிக்குக் கொண்டு சென்றன.

வேரூன்றிய ஆன்ம வாழ்வு, கூர்மையான முதிர்ந்த அறிவு, உள்ள உரமுடையதும் எளிமையான வெளிப் போக்குடைய ஆழ்ந்த அனுபவம் கொண்ட புதிய ஆயர் சேவை உள்ளத்தோடு ஏற்றிருக்கும் மேய்ப்புப் பணியில் இறைவன் அவருக்குத் தம் அருட்கொடைகளை வாரி வழங்கவும், அவர் தம் பணியில் சிறக்கவும் மனமார வாழ்த்துகிறோம்.

# புரியாத புதிர்களா?

## வேதாகமம் பற்றிய சில வினாக்களுக்கு விடைகள்

### 1. வேதாகமத்தில் எத்தனை நூல்கள் உண்டு?

**கத்தோலிக்கரின் பதில் :-**

பழைய ஏற்பாட்டில் 46 நூல்களும், புதிய ஏற்பாட்டில் 27 நூல்களும் உண்டு.

**அடிப்படைவாதத்தினரின் (பிற கிறிஸ்தவ சபையினரின்) பதில்:-**

பழைய ஏற்பாட்டில் 39 நூல்களும், புதிய ஏற்பாட்டில் 27 நூல்களும் உண்டு.

பிற கிறிஸ்தவ சபையினரும், அடிப்படைவாதத்தினரும் **பின்வரும் பழைய ஏற்பாட்டு நூல்களை ஏற்றுக் கொள்வதில்லை:**

1. தொபியாஸ் ஆகமம்;
2. யூதித் ஆகமம்;
3. மக்கபேயர் ஆகமம் 1;
4. மக்கபேயர் ஆகமம் 2;
5. சீராக் ஆகமம்;
6. ஞான ஆகமம்;
7. பாரூக் ஆகமம்;

### 2. வேதாகமத்திற்கு எத்தனை கருத்துகள் உண்டு?

**கத்தோலிக்கரின் பதில் :-**

குறைந்தது இரு கருத்துக்களாவது உண்டு. அதன் ஆரம்ப கருத்து, அது இன்று எனக்கு ஊட்டும் கருத்து. உ+ம்: 2 திமோ 3,16 ஆரம்பத்தில் பழைய ஏற்பாட்டை மட்டுமே குறித்தது;. ஆனால் இப்போது அது எனக்கு முழு வேதாகமத்தையும் குறிக்கின்றது.

**அடிப்படைவாதத்தினரின் பதில் :-**

ஒரே ஒரு கருத்து தான் கிறிஸ்தவ சமூகமாகிய எமக்கு இன்று வேதாகமம் என்ன கருத்தைக் தருகின்றதோ, அதே கருத்தைத்தான் அதை எழுதியவர்களும் கொண்டிருந்தார்கள்.

### 3. வேதாகமம் எப்படி எழுதப்பட்டது?

இரு தரப்பினரும் வேதாகமம் எழுதிய முறையை தேவ ஏவுதல் என்று அழைக்கின்றனர். ஆனால் கத்தோலிக்கரும் அடிப்படைவாதத்தினரும் வேதாகமம் எழுதப்பட்ட முறைக்கு விளக்கம் கொடுக்கும் முறையில் வேறுபடுகின்றனர்.

**கத்தோலிக்கரின் பதில் :-**

வேதாகமத்தை எழுதிய எழுத்தாளர்கள் மக்கள் பற்றியும், நிகழ்ச்சிகள் பற்றியும் சிறந்த அறிவு கொண்டவர்களாக இருந்தார்கள். எழுத்தாளர் தூய ஆவியின் ஏவுதலுக்கு உட்பட்டிருந்தனர். ஆனால், அவர்கள் தங்களது சொந்த மனநிலைகளையும் எழுத்து முறைகளையும் பிரதிபலிக்க கூடிய சுதந்திரமுடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் தாங்கள் வாழ்ந்த காலப் பண்பாட்டினால் உருவாக்கப்பட்டவர்கள் ஆனால், பிழைகள் விடக் கூடியவர்கள் அல்லர்.

**அடிப்படைவாதத்தினரின் பதில் :-**

எழுத்தாளர்களின் காதுகளில் இறைவன் இரகசியமாகப் பேசினார். அவர்களின் மூளையில் சொற்களைத் திட்டமிட்டுக் கொடுத்தார். அல்லது இறைவன் அனுப்பிய சம்மனசு கூறியவற்றை எழுதியவர்கள் மனித செயலாளர் அல்லது பதிவு நாடா போன்றவர்கள். அவர்கள் இறைவனின் முழு ஆதிக்கத்தின் கீழ் தான் இயங்கினர்.

### 4. வேதாகமத்தில் அவ்வளவு சிறப்பாக இருப்பது என்ன?

உலகிலுள்ள நூல்களில் அல்லது சாதனங்களில் மிகவும் சிறப்பான புத்தகமாக வேதாகமம் இருப்பதாக இரு தரப்பினரும் கணிக்கின்றனர். ஆனால், இரு தரப்பினருக்குமிடையில் மிகவும் முக்கியமான வேறுபாடுகள் உண்டு.

**கத்தோலிக்கரின் பதில் :-**

இயேசுநாதரைப் போல் வேதாகமம் நூற்றுக்கு நூறு வீதம் தெய்வீக தன்மை நிறைந்ததாகவும், நூற்றுக்கு நூறு வீதம் மனிதத்தன்மை நிறைந்ததாகவும் உள்ளது. ஒவ்வொரு ஏற்பாடும், புத்தகமும், அத்தியாயமும், வசனமும், சொல்லும் முழுமையாகத் தெய்வீகத் தன்மையும் மனிதத் தன்மையும் உள்ளதாக இருக்கின்றது. ஆனால், அதன் மனிதத் தன்மையின் பரிமாணத்தினால் அதில் பிழைகளும் உண்டு. (உ+ம் :- புனித அருளப்பர் 9ம் அதிகாரம் 31ம் வசனம் ''தேவன் பாவிகளுடைய வேண்டுதலை கேட்பதில்லை.'')

**அடிப்படைவாதத்தினரின் பதில் :-**

வேதாகமம் நூற்றுக்கு நூறு தெய்வமயமானது. அது இறைவனின் வார்த்தை. ஒரு பிழைதானும் இல்லாத ஒரே ஒரு புத்தகம் அல்லது சாதனம் அதுதான்.

### 5. வேதாகமத்துக்கு விளக்கம் கொடுப்பவர் யார்?

**கத்தோலிக்கரின் பதில் :-**

ஆரம்ப கருத்தை கண்டுபிடித்தபின்தான் நாம் வேதாகமத்திற்கு உண்மை விளக்கம் கொடுக்க முடியும். இல்லாவிடின் நாம் மோட்டுத்தனமான பிழைகளை விடுவோம். ஆரம்ப கருத்தை கண்டுபிடிக்க பல்வேறு வழிகள் உண்டு. வேதாகமம் எழுதப்பட்ட மொழியையும் அதை எழுதியவர்களுடைய கலாசாரத்தையும் சரித்திரத்தையும் அறிந்த அறிஞர்கள் வேதாகமத்தின் ஆரம்ப கருத்தைக் கூறுகின்றனர். வேதாகமத்திற்கு உத்தியோக பூர்வமாகக் கருத்துக் கூறத் திருச்சபையின் ஆசிரியத்திற்கே (போதனைப் பீடத்திற்கே) அதிகாரம் உண்டு.

அடுத்த இதழில்
2ஆம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் இறை வெளிப்பாடு பற்றிய மறைக் கொள்கைத் திரட்டு
அதிகாரம் 1

**அடிப்படைவாதத்தினரின் பதில் :-**

வேதாகமத்தை இன்றைய எந்த மொழியில் வாசிக்கும் நானோ வேறு எவரோ அதற்கு விளக்கம் கூறமுடியும். (உண்மையில் அடிப்படைவாதத்தினர் தங்கள் போதகர் கூறும் விளக்கத்தையே ஏற்றுக் கொள்கின்றனர்.)

### 6. வேதாகமத்தைப் பாவிப்பது எப்படி?

**கத்தோலிக்கரின் பதில் :-**

கத்தோலிக்க பாரம்பரியத்தோடு (பொதுச் சங்கங்கள், பாப்பரசர்கள், ஆயர்கள், புனிதர்கள், வேதசாஸ்திரிகள் நடைமுறையிலுள்ள வழக்கங்கள்), மதச்சம்பந்தமுள்ள அல்லது மதச்சம்பந்தமற்ற நன்மையான உண்மையான அழகான எதையும் பயன்படுத்தலாம்.

**அடிப்படைவாதத்தினரின் பதில் :-**

வேதாகமம் தேவனை அறிந்து விசுவாசத்தை அனுசரிக்க ஒரே ஒரு நம்பிக்கைக்குரிய வழிகாட்டியாக உள்ளது. இயேசு என்னை அன்பு செய்கிறார். வேதாகமம் இந்த வாக்கை அப்படியே கூறுவதால் இதை நான் அறிகிறேன்.

## நற்பண்புகள் நிறைந்த நல்ல மேய்ப்பன்

அருள்திரு இ. மே. யோசவ்

பேரருள் திரு இராயப்பு யோசவ் ஆண்டகை ஒரு நல்ல ஆன்ம மேய்ப்பனுக்குத் தேவையான பல நற்பண்புகளைக் கொண்டுள்ளார் என்றால் மிகையாகாது. முதற் கண் இவர் ஆழ்ந்த இறைபக்தியும், செபவாழ்வில் தீவிர ஈடுபாடுமுள்ளவர். இவர் புதுவாழ்வு இயக்கத்திலும், செபக் குழுக்களிலும் காட்டிய ஆர்வமும் அக்கறையும் இதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. அத்துடன் இவர் தமது வாழ்வில் வீண் ஆடம்பரங்களைத் தவிர்த்து எளிமையைக் கடைப்பிடிப்பவர்; பேச்சுவார்த்தையில் அடக்கமானவர்; அதே வேளை எண்ணிய கருமத்தைச் சிறப்பாகச் செய்து முடிக்கும் செயல் வீரர். இவர் பணிபுரிந்த பங்குத்தளங்களில் இவர் மேற்கொண்ட கட்டிடப் பணிகளும் மற்றும் பல பயனுள்ள முயற்சிகளும் இவரது செயற்திறனுக்குச் சான்றாகவுள்ளன. மேலும் இவர் பட்டம் பதவிகளிலோ, பெயர் புகழிலோ நாட்டம் கொள்பவர் அல்லர்; மாறாக அமைதியாகவும்

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

# தீவகத்தின் முத்து

கடல் சூழும் நெடுநகரை பிறப்பிடமாய் கொண்ட இராயப்பு- அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் 4ஆவது தவப் புதல்வனாக 1940ஆம் ஆண்டு ஏப்பிரல் 16ஆம் நாள் தீவகத்தின் முத்தாக அவதரித்தார், ஞானானந்தர் யோசப்.

தமது ஆரம்ப கல்வியை நெடுநகர் புனித சவேரியார் பாடசாலையில் கற்றார். சிறுவனாய் வளர்ந்த யோசவ் தன் பெற்றோர் ஏனைய சகோதரங்களுடன் செட்டிகுளம் என்னும் கிராமத்திற்குச் சென்ற போது, இவர் அன்னையின் சகோதரியின் அணைப்பில் இருந்து தன் ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்தார்.

சிறுவயதிலேயே கல்வியில் ஆர்வமும், தேவபக்தியும், தாராளசிந்தையும், இனிய பண்புகளும் கொண்டு விளங்கினார். சிறுபிராயத்தில் இருந்தே இவரின் வாழ்க்கை ஏனைய சகோதரங்களிலிருந்து வேறுபட்டதாகவே அமைந்தது. தானும் தன் வேலையுமாக இருப்பார். இவருக்கு ஆலயம் செல்வதென்றால் அளவில்லா ஆனந்தம், இதனால் திருப்பலியில் பக்தியுடனும், கருத்துடனும் தினமும் பங்கு பற்றி வந்தார். தேவநற்கருணையை எப்போது பெறுவேன் என்ற ஆசையுடன் தன் தாயாரையும், பங்குத்தந்தையையும் அடிக்கடி வினாவுவர். நற்கருணைச் சந்திப்பதில் அதிக நேரத்தை செலவிடுவதிலே மகிழ்வு கொண்டார். விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பது போல இவர் சிறுவருடன் இணைந்து பூசைகள் வைத்து விளையாட்டாக ஒடியலை கிறிஸ்துவின் சரீரம் என வழங்குவார்.

கணக்கில் ஆற்றலும், சித்திரம் வரைவது, மென்பலகைகள் கொண்டு விளையாட்டுப் பொருட்கள், உபகரணங்கள் அமைப்பதை பொழுது போக்காகக் கொண்டவர். அவற்றைப் பார்த்து ரசித்து, பிறருக்குக் காட்டி மகிழ்ந்து, அவற்றை விரும்புவோருக்கு கொடுத்து விடுவார்.

சிறு வயதிலிருந்தே வயோதிபர், வயதில் மூத்தோரில் அதிக அக்கறை கொண்டு அவர்களை அன்பு- உதவி செய்வதில் ஆர்வம் காட்டினார். இளமையில் ஏழைகளை வீட்டில் வரவேற்பதில் தனி இன்பம் கண்ட அவர், இறைபணியில் தன் இதயத்தில் அவர்களுக்கு ஓர் தனி இடம் கொடுத்தார்.

அருட்சகோதரி
● யோசபாத். (தி. கு.)



புதிய ஆயரை பூவுலகிற்கு ஈந்தவர்கள்

# ஆயர் யோசவ் நித்திலமே வாழி!

**விருத்தம்**

சீர்பெருகுங் கடல்புடை சூழ்
செல்வமலி நெடுந் தீவின்
ஏர் பெருகும் நற் புகழ் பெற்ற
ஏற்றமிகும் குடும்பமதில்
பார்புகழும் தந்தை இராயப்பு
தம்பதியர் தவமகனாய்
பேர்புகழ் பெற்று மன்னார்
மறைவட்டம் ஆளவந்தார்

அலையெறி ஆழிசூழும் எழில் நெடுந்தீவதனில்
மலைநிகர் இராயப்ப மருத்துவ சிகாமணியின்
குலக் கொழுந் தாயுதித்து குவலயம் போற்றவந்த
நிலையுயர் ஆயர் யோசப் நித்திலமே நீவிர் வாழி.

அறப்பணி தன்னை ஏற்று அருள் மறைத் துறவியாகி
மறைப்பணி யொன்றே உந்தன் மாபெரும் கடமையென்று
இறைப்பணி செய்யநாளும் இணையில்லாத் தொண்டுசெய்து
கறையகல் வாழ்வு கண்ட மறை ஆயர் யோசப் வாழி.

**அகவல்**

நீலத்திரை கடல் சூழும் எழில்நகர்
ஞாலத் துலவுநல் ஞானியர் வதிநகர்
கோலத் திருமகன் கொஞ்சிக் குலவிடும்
நூல்நயந் தோர்ந்த நூதன மாந்தரும்
ஆழிச் செல்வமும் அருங்கலைச் செல்வமும்
மேழிச் செல்வமும் மேலுறக் கொண்ட
ஆழிசூழ் தீவின் அருணோ தயமே!
வாழியவுன் செங்கோல், வளர்கவுன் மறைப்பணி
வாழிய மேய்ப்பரே, வாழிய பல்லாண்டு
வாழிய, வாழிய, வாழியவே.

● திரு. சவிரியான் லெம்பேட்

# ஈழத்துக் கத்தோலிக்க திருச்சபையில் கைமாறும் தலைமைத்துவங்கள்

● தமிழ் நேசன்

இன்று இலங்கையின் அரசியலில் பெரும் தலையிடியையும் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தலையும் ஏற்படுத்தி, சர்வதேச கவனத்தையும் ஈர்ந்துள்ள பிரச்சினை, வடக்கு கிழக்கில் இடம்பெறும் தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டமாகும். யுத்த மேகங்களால் சூழப்பட்டு, அனைத்து அரசியல் யந்திரங்களும் முடக்கி விட்ட இவ்வேளையில் மக்களின் அன்றாட வாழ்வே பெரும் போராட்டமாக அமைந்துள்ளது. இத்தகையதொரு இக்கட்டான சூழ்நிலையில் இன்று வடக்கு, கிழக்கு பலமிக்க, சக்திவாய்ந்த அமைப்பாக இயங்கி வருவது கத்தோலிக்கத் திருச்சபை மட்டுமே. விரக்தி அடைந்திருக்கும் மக்களின் சமய நம்பிக்கையை வளர்த்து, அகதியாக்கப்பட்டவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து, மக்களின் கஷ்ட துன்பங்களில் அவர்களோடு இருந்து, பங்கு கொண்டு, உண்மை நிலைமைகளை வெளி உலகிற்குத் தெரிவிக்கக் கூடிய, நம்பிக்கைக்கு உரிய ஒரு பக்க சார்பற்ற நிறுவனம் கத்தோலிக்க திருச்சபையே என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வர். எனவே இன்றைய சூழ்நிலையில் குறிப்பாக யாழ்ப்பாணம், மன்னார் மறைவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட புதிய ஆயர் நியமனங்கள் முக்கியம் பெறுகின்றன. இவ்வேளையில் ஈழத்து திருச்சபையின் கடந்த கால செயற்பாடுகள், இன்றைய யுத்தகாலத்தில் அது எதிர்நோக்கும் சவால்கள், புதிய தலைமைத்துவங்களிடம் இருந்து மக்களின் எதிர்பார்ப்பு என்ன என்பன பற்றியெல்லாம் அக்கறையோடும், ஆர்வத்தோடும் பலராலும் சிந்திக்கப் படுகின்றன.

**ஆயர் தியோகுப்பிள்ளையின் கால்நூற்றாண்டுத் தலைமைத்துவம்.**

இலங்கைத் திருச்சபையின் ஆரம்பகால வரலாறு யாழ்ப்பாணத் திருச்சபையுடனும் தொடர்பு கொண்டுள்ளது. 25 வருடங்களைப் பூர்த்தி செய்து, ஆயர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை யாழ் மறை மாவட்டத்திற்கு மட்டுமல்ல, முழுத்தமிழ் சமுதாயத்திற்குமே பெரும்பணி ஆற்றியுள்ளார். ஈழத்து வரலாற்றில் இடம்பிடித்த தமிழ் தலைவர்களில் இவரும் ஒருவர். ஆயரவர்கள் யாழ்மறைமாவட்டத்தின் சமய, சமூக, பொருளாதார, அரசியல் துறைகளின் முன்னேற்றத்திற்கு பல வழிகளிலும் அயராது உழைத்தார். யாழ் மறைமாவட்டத்தில் இருந்து மன்னார் மறைவட்டம் பிரிவதற்கு உறுதுணையாக இருந்தார். மண்வாசனையைத் தழுவியதாக குருத்துவப் பயிற்சியை தனது மறைமாவட்டத்திலேயே ஆரம்பித்தார். கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரி இவரது அயரா உழைப்பின் வெளிப்பாடு ஆகும். 80களின் முற்பகுதியில் உக்கிரமடைந்த இனப்பிரச்சினை சொந்த மண்ணிலும் பல அகதிகளை உருவாக்கியது. ''மனித முன்னேற்ற நடுநிலையத்தை'' நிறுவி துன்புறும் மக்களின் துயர் துடைத்தார். தமிழ் கலை, கலாசாரத்தில் பற்றுடையவரான ஆயர் அவர்கள் திருமறைக் கலாமன்றத்தின் வாயிலாக கலை வழி மறைபரப்ப தன் முழு ஒத்துழைப்பையும் வழங்கினார். தொலை நோக்கோடு செயற்பட்ட இவர் மறைவட்டத்தின் வளர்ச்சிக்காக பல ஆக்கப் பணிகளில் ஈடுபட்டார். உயர் கல்விக்காக குருக்களை வெளிநாடுகளுக்கு அனுப்பினார். சுற்று நிருபங்கள் வாயிலாக காலத்துக்குக் காலம் குருக்களுக்கும், இறைமக்களுக்கும் ஆன்ம உரையும், அறிவுரையும் வழங்கினார். துன்புறும் தமிழ் மக்களின் சார்பாக தேசிய, சர்வதேச அரசியல் தலைவர்களின் கண்டனத்திற்கும், விமர்சனத்திற்கும் ஆளானார். எத்தனை எதிர்ப்புக்கள் வந்தாலும் தான் சரியென உணர்ந்ததை அஞ்சா நெஞ்சுடன் கூறும் அறிவு மிக்க தலைவராக அவர் விளங்கினார்.

**ஆயர் தோமஸ் சவுந்தர நாயகத்தின் ஒரு தசாப்த தலைமைத்துவம்.**

யாழ்ப்பாணமறைமாவட்டத்திலிருந்து 1981ல் தனியாகப் பிரிக்கப்பட்ட மன்னார் மறைமாவட்டத்தின் முதல் ஆயராக மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை நியமிக்கப்பட்டார். இதுமன்னார், வவுனியா ஆகிய அரசியல் நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கி உள்ளது. புதிய மறைமாவட்டத்தின் ஆயருக்கு மாபெரும் பணிகள் காத்துக் கிடந்தன. பல வகையான புதிய திட்டங்களை அவர் உருவாக்கி செயற்பட வேண்டி இருந்தது. நாட்டின் சீரற்ற சூழ்நிலையிலும் ஆயர் அவர்கள் இம் மறைமாவட்டத்தை முன்னேற்றப்பாதைக்கு கொண்டு வந்தது, அவருடைய நிர்வாகத் திறனையே கோடிட்டுக் காட்டுகிறது. தீர்க்க தரிசன நோக்கோடு செயற்பட்ட ஆயரின் தலைமைத்துவம் உண்மையிலேயே பாராட்டத்தக்கது.

வன்முறையின் விளைவுகளால் பாதிக்கப்படும் மக்களுக்கும், ஏழைகளுக்கும் உதவ 'வாழ்வுதயம்' என்னும் அமைப்பின் மூலம் உதவி புரிந்தார். மறைமாவட்டத்தின் எதிர்கால நலன் கருதி பல குருக்களை மேற்படிப்புக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பினார். நாளைய குருக்களாகிய இன்றைய குருமட மாணவர்களில் தனி அக்கறை செலுத்தி அவர்களிற்குரிய பயிற்சியை திறம்பட வழங்கினார். மடு மாதாபெயரில் ஆரம்ப குருமடத்தை நிறுவியதன் மூலம் மன்னார் மறைவட்ட எதிர்காலக் குருக்களுக்கான சிறந்ததோர் அத்திவாரத்தை இட்டார். ஆயர் தனது பதினொரு வருடகால பணிக்காலத்தில் பல சவால்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியிருந்தது. 1985 இல் வங்காலைப் பங்குத் தந்தையாக இருந்த அருட்திரு மேரிபஸ்ரியன் அடிகளின் படுகொலைச் சம்பவமானது, இம் மறைமாவட்டத்தின் கறைபடிந்த வரலாறுகளில் ஒன்று. அடுத்தடுத்து இடம்பெற்ற இராணுவத்தின் கெடுபிடிகளினால் மக்கள் வேட்டையாடப்பட்டனர். இரண்டாவது ஈழப் போர் ஆரம்பமானபோது, பல இடங்களை இராணுவம் கைப்பற்றியது. கைப்பற்றப்பட்ட இடங்களில் உள்ள மக்கள் அகதிகளாக மடுத்திருப்பகுதியில் தஞ்சம் புகுந்தனர். வங்

(தொடர்ச்சி 10 ஆம் பக்கம்)

# முப்பங்கின் மகத்தான பணியாளன்

## புரட்சியிற் பூத்த புதுமலர்

அருள்திரு R. C. X. நேசராஜா, பங்குத்தந்தை, உரும்பிராய்.

இறைவனின் குருவாகதேர்ந்தெடுக்கப்பட்டு, ஒரு குறிப்பிட்ட மறைவட்டத்திலுள்ள இறைமக்களையும், ஞான மேய்ப்பர்களையும் வழி நடத்தும் ஆயனாக உயர்த்தப்பட்டு மன்னார், மறைவட்டத்தின் ஆயராக அபிஷேகம் பண்ணப்படும் மேதகு ஆயர் ஆர். ஜோசப் ஆண்டகை அவர்களின், 'ஆரம்பப் பங்கு' உரும்பிராய் மண் என்பதில் அவருடன் சேர்ந்து இவ்வூர் வாசிகளும் பெருமைப் படுகிறார்கள். இறைவனுக்கு நன்றி கூறுகிறார்கள்.

அவரின் தலைமைத்துவத்தை தீர்க்க தரிசன நோக்கோடு கவனித்த யாழ். ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் 1971 மே மாதத்தில் உரும்பிராய் என்னும் இடத்திற்கு பங்குத் தந்தையாக பணியாற்ற அனுப்பிவைதார். நாட்டில் தீவிரவாதம் தலைதூக்கி இரத்த ஆறு ஓடிய காலம் அது. பஞ்சமும், பட்டினியும் மக்கள் மத்தியில் மலிந்த வேளையது. தீவிர நோக்கும்—தெளிந்த சிந்தையும் உடைய ''எம் தந்தை'' இந்நாள் ஆயர் புரட்சியில் பூத்த ஒரு புது மலர், எம் மண்ணில் காலடி பதித்த வேளையில், நாமின்று வழிபடும் ஆலயம். சிறுகொட்டிலாக காட்சியளித்தது.

ஊருக்கு அழகு சேர்ப்பது ஆறும், ஆலயமும் என்பார்கள். வசதிகள், வருவாய்கள் குறைந்த எமது கிராமத்திலே, வரட்சியும் – நாட்டுப் புரட்சியும் சேர்ந்து எம்மவர்களை இன்னும் துன்புறுத்திய வேளையிலே – ''ஏழையின் காணிக்கையை'' பெரிதெனப் புகழ்ந்த எம்பரன் இயேசு போல, எமது மக்களின் சிறிய பங்களிப்பையும், பரந்த மனத்துடன் ஏற்று எமது ஆலயத்தை உயர எழுப்பியமையே எம் ஊர் மக்கள் உள்ளம் உள்ளளவும் மறவார் என்பது திண்ணம். நினைத்ததை முடிக்கும் செயல் வீரனாகிய அவர் குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் ஆலயத்தைக் கட்டி முடிக்கும் வேலையோடு மட்டும் நின்றுவிடவில்லை. ஆன்மாக்களைக் கட்டியெழுப்பும் வேலையிலே அதிகம் அக்கறை உடையவராகக் காணப்பட்டார். சுருங்கக் கூறி விளங்கவைக்கும் திறன் படைத்த அவர் எல்லோரையும் சமமாக மதிப்பதிலும், ''பாத்திரம் அறிந்து பிச்சை இடுதலில்'' மக்களை இனம் காண்பதிலும், எதிர்காலத்திட்டங்களை மதிப்பீடு செய்வதிலும் வல்லவராய் இருந்தார் என்பது அனைவரும் அறிந்த உண்மை.

''நாற்று மேடைகளே.'' எதிர்கால விருட்சங்களின் முன்னுதாரணங்கள் என்பதனை தொலை நோக்கோடு கவனித்து, நாற்று மேடைகளான ''பாலர் பாடசாலை''யை நன்முறையில் உருவாக்க தகுதியுடையவர்களைத் தெரிவு செய்து பயிற்றுவித்ததை எமது மாணவ சமுதாயம் மறக்க முடியாது.

''எங்கள் சுவாமி'' என்று சிறியோர் முதல் முதியோர் வரை உரிமை கொண்டாடிப் போற்றும் அளவிற்கு அவர் ஒவ்வொருவர் இதயத்திலும் இடம் பிடித்துள்ளார்.

இன்று அவர் இறைவனின் மக்களை இனிதே வழி நடத்தும் ஆயனாக உயர்த்தப்பட்டிருப்பதை எண்ணி அவரின் ''முதற் பிள்ளைகளாகிய'' உரும்பிராய் மந்தைகள் நன்றிப் பெருக்குடன் இறைவனிடம் வேண்டுகிறார்கள்.

அவரிடம் ஒப்படைக்கட்பட்ட மந்தைகளை நல்ல மேய்ச்சலில் மேயச் செய்யவும் குளிர்ந்த நீர் நிலைகளில் இளைப்பாறச் செய்யவும் வல்ல தேவன் நல்ல உடல் நலத்தையும், ஆன்மீக பலத்தையும் அருளச்செய்ய வேண்டி மன்னார் மந்தைகளோடு யாழ். உரும்பிராய் மந்தைகளும் மகிழ்கிறார்கள்.

## திருப் பெருகும் ஆயர்குலக் கொழுந்து

— யாழ். ஜெயம் —

வெண்பா

நாளும் சுடர்ஞானம் நல்லன்பு மீக்கூர
வாழும் வரந்தேடி வந்தவனே — ஆளும்
செங்கோல் அறம்மேவு செல்வபதம் கண்டமைதி
பொங்கும் ஒளிசாலும் பூ

★

நெருப்புமிழும் கோடைவெயில் கொதிக்கும் நேரம்
நீர்தவழும் கார்மேகம் வருகை மேவ
விருப்பவிழ வான்பார்க்கும் பயிர்கள் போன்றோம்
வித்தகனே நும்மாட்சி மாட்சி காண்போம்
உருப்பெரிய கடற்பரப்பில் நீரின் வீழ்ச்சி
உயிர்த்துளிகள் ஒவ்வொன்றும் எழுச்சி பாடும்
திருப்பெருகும் ஆயர்குலக் கொழுந்தே எங்கள்
தேவைகளிற் சேவைதரும் தாதாய் வாழ்க.

★

காலமதைக் கடந்துணரும் வானோரீட்டம்
கண்மணியே நும்மகத்துட் கலந்தே நின்றார்
மூலமதன் முழுப்பொருளாய் எல்லாம் வல்ல
மூவுலக மாள்பரனார் உம்முள் நின்றார்
ஆலமெனும் பாவநிலை அருளால் வென்ற
அன்னைமரிக் கன்னிமனத் தாற்றல் தந்தார்
சீலமெனும் வானகத்தே ஞானா னந்தச்
செழுங்குயிலே உளங்குளிரப் பறந்தே வாழ்க.

## விசுவாசத்தின் தவச்சுடர்

அருள்திரு. T. J. சந்திரன்,
பங்குத்தந்தை, பெரியவிளான் – பண்டத்தரிப்பு

ஆண்டகை அவர்கள் 1974ம் ஆண்டு பண்டத்தரிப்பு, பெரியவிளான், அளவெட்டி, மாசியப்பிட்டி ஆகிய பங்குகளுக்கு பங்குத் தந்தையாகப் பெறுப்பேற்று 1980ம் ஆண்டு வரை தம்பணியை அமைதியுடனும், சிறப்புடனும் வளர்ச்சிப் பாதையிலே புரிந்து வந்தார். தம்பொறுப்பில் உள்ள மந்தைகளுக்கு பசும் புற்றரையைக் காட்டி சிறந்த நீர் நிலைகளுக்கு அழைத்துச்சென்று ஒவ்வொரு மந்தையையும் மகிழ்ச்சியுடன் வழி நடத்தினார். ஒவ்வொரு மந்தையிலும் தனிப்பட்ட அக்கறை கொண்டிருந்தார். தமது பொறுப்பில் இருக்கும் எந்த மந்தையையும் அழிந்து போகவோ தொலைந்து போகவோ விடவில்லை. எல்லோரையும் மிகுந்த அக்கறையுடனும் கூட்டிச் சேர்த்தார். தமது மந்தையில் யாராவது துன்புற்றால் தேடிச் சென்று ஆறுதல் அளிப்பார். தமது மந்தைகள் மகிழும் வண்ணம் அவைகள் தேவைகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப வழிகாட்டுதல்களைக் கொடுப்பார். இவையெல்லாம் நம் நெஞ்சில் நீங்கா நினைவுச் சின்னங்களாகும்.

அன்பு நெறிகாட்டி அருட்கரம் நீட்டி அறிவொளி பரப்பி அறவழி செலுத்தி விசுவாசத்தின் தவக்கொழுந்தே எனத் திகழ்ந்தார். திருமறையின் பெருமையை உலகறியச் செய்ய அன்பு பணிக்கென தம்மை முழுமையாக அர்ப்பணித்தார். சலியாத உழைப்பின் குன்றாக அயராத ஊக்கமும், ஆழ்ந்த பக்தியும், சோர்வுறாத உள்ளமும் ஒருங்கிணைந்த அன்புத் தந்தையாக எம்மோடு வாழ்ந்தார். நீதி நேர்மை நிலவிட, ஒற்றுமை நட்பு ஓங்கி வளர்ந்திட சிந்தனையால் சொல்வளத்தால் செயற் திறத்தால் கருத்தரங்கால் ஊர் கூட்டி உயிரூட்டம் தந்தார். எம்மில் உணர்வூட்டமும் கண்டார். சமத்துவம் சகோதரத்துவம் பரவிட வீடும், நாடும் உயர்ந்திட ஊக்கமுடன் உழைத்தார்.

வானளாவ உயர்ந்து கம்பீரமாகக் காட்சி தரும் புனிதர் ஆலயங்களை அமைத்தார். ஆலயத்தின் வனப்பிற்கு மேலும் மெருகூட்டி அற்புத அமைப்புகளுடன் பலிப்பீடங்களை அமைத்து ஆலய வழிபாட்டு முறைகளில் ஆன்மீக மறுமலர்ச்சிக்கு வழிவகுத்தார். ஆலய நிர்வாகங்களை பங்கு மக்கள் அனைவர்க்கும் பரவல் ஆக்கினார். வானத்து வெண்ணிலாவும் கானத்துத் தண்பொழிலும் எவர்க்கும் உரியன. கதிரவனொளியும் கார் மழையும் யாவர்க்கும் நன்மை பயப்பன. அது போன்று எமக்கு மட்டுமல்ல, அவரது அன்புப் பணிகளும் அரும் கலைகளும் எல்லோருக்குமே உறுதுணையாய் விளங்கின. எந்நிலையிலும் எவ்வழியிலும் எத்தருணத்திலும் அவரை எதிர்நோக்கி வரும் எவரும் வெறும் கையாகத் திரும்பியதில்லை. கொடையில் கோமகனாய், குணத்தில் குலவிளக்காய், விசுவாசத்தில் வித்தகராய், சலியாத உழைப்பினராய், ஞானஒளி தந்த நாயகனாய், தனக்கென வாழாப் பிறர்க்குரியானாய் வாழ்ந்து சிறுவர்க்கென பல கல்வி நிலையங்களையும், பராமரிப்பு நிலையங்களையும் அமைத்து முதுமையிலும், வறுமையிலும் வாடுவோருக்கு அன்பும், தென்பும் கொடுத்து ஆன்மீகத்தில் எல்லோரும் உயர்ந்திட அயராத உழைப்பின் உத்தமனாய் விளங்கினார். இவரது பணி என்றும் எம் இதயங்களின் நீங்காத, அணையாத தீபங்களாகும். ஆண்டகையின் பணி பரந்து விரிந்து பாரில் உள்ளோர் அனைவரும் பயன் பெற மனமார வாழ்த்தி இறையருள் வேண்டுகின்றோம்.

## பணியினால் புகழ் பெற்ற புதிய ஆயர்

— துரை ஆரோக்கியதாசன், B. A., Dip. Ed. புனித யூவனியார் பங்கு

எழில் நகராகிய யாழ்நகரின் கிழக்குப் பகுதியில் முன்னர் ''பிரபுக்கள் குடியிருப்பு'' என அழைக்கப்பட்ட சுண்டுக்குளிப்பகுதியில் கலைக்கோயில் எனக் காட்சியளிக்கும் திருமுழுக்கு அருளப்பர் ஆலயம் 1630ஆம்ஆண்டளவில் தோன்றியது. இவ்வாலயம் போர்த்துக்கேயரின் ஆட்சியில் உருப்பெற்று, ஒல்லாந்தர் காலத்தில் இலை மறைகாய் போலத் தன்னைப் பாதுகாத்து, ஆங்கிலேயர் காலத்தில் மறைச் சுதந்திரத்தின் கனியெனக் கனிந்து மக்களின் விசுவாசத்தைப் பேணியும் அருள்பாலித்தும் வந்துள்ளது,

யாழ் சுண்டுக்குளிப்பங்கு இன்று ஆன்மீக வாழ்விலும் சமூக வாழ்விலும் பன்மடங்கு வளர்ச்சியும் எழுச்சியும் உயர்ச்சியும் அடைந்து வருவதையிட்டு பங்கு மக்கள் உலப்பிலா உவகை அடைகிறார்கள். இதற்கு மூலகாரணம் அங்கு பணிபுரிந்த பல பங்குத்தந்தையர்களின் தன்னலமற்ற பணியாகும். ஈழமணி நாட்டின் கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றிலே யாழ் சுண்டுக்குளிப்பங்கின் தந்தையாகபணி புரிந்தவர்களில் மூன்றாவது ஆயராக ஆண்டவனின் அருட்கரத்தினால் ஆட்கொள்ளப்பட்டவரே மேதகு கலாநிதி இராயப்பு யோசவ் ஆண்டகையாகும்.

03-02-1985இல் பங்குத்தந்தையாக அருட் கலாநிதி இராயப்பு யோசவ் அடிகள் பொறுப்பேற்றார். இப்பங்கு திருமுழுக்கு அருளப்பர், புனித ஆசீர்வாதப்பர், புனித திரேசாள் ஆலயங்களை உள்ளடக்கியுள்ளது. இடர்பாடுகள் மிகுந்த இன்றைய சூழ்நிலையில் பல பணிகள் இவரை காத்து நின்றன. ''என்னைப் பின் செல்'' (புனித மத் 9:6) என்ற கிறிஸ்துவின் அமுதவுரைக்கேற்ப அல்லும் பகலும் பங்குமக்களின் ஆன்மீக வாழ்விலும், சமூக வாழ்விலும் அயராது உழைத்தார். இவர் மலையலவு பணிபுரிந்து கடுகளவு கதைத்து காலந்தோறும் நன்றிக்கடனுடன் நினைவு கூரப்படுகிறார் என்பதற்கு திருமுழுக்கு அருளப்பர் ஆலய நூற்றாண்டு மலர் ஒன்றே தக்க உரைகல்லாகும்.

இவரின் இன்சொல்லும், இன்செயலும் பலரை சிறப்பாக ஏழை எளியவர்களின் உள்ளங்களைப் பெரிதும், தொட்டன. அகதிகளாக உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, ஆற உறைவிடமின்றி சமூக அநீதிகளால் பாதிப்புற்றோர், நோயாளர்கள், அநாதைகள், வயோதிபர்கள், கல்வி கற்பதற்கு வழியின்றித் தவித்த ஏழைச் சிறுவர்கள் முதலியோரின் இதயசுத்தியான ஆசீரே இவரை ஆயர் நிலைக்கு உயர்த்தியுள்ளது.

இவர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயம் புதிதாக எழிலுடன் காட்சியளிப்பதற்குக் காரணகர்த்தாவாயிருந்து செயலாற்றினார். அத்துடன் அழகிய குருமனையும் கட்டப்பட்டுள்ளது. தமிழ் கலைவடிவத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய ஆலயம் நவீன வசதிகளுடன் வழிபடுவோருக்கு உகந்த சூழலாக அமைந்துள்ளது. இவரது பெரும் பணியினால் ஆலய மக்களின் நெஞ்சில் அழியாத இடத்தைப் பெற்றுள்ளார். கல்லில் கலை வடிவத்தில் கடவுளைக் கண்ட தமிழ்ச் சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டாக இவரது பணியினால் புனித திரேசம்மாள் ஆலய முகப்பு புனரமைப்பு வேலைகள் சுந்தர வடிவமாக மிளிர்கின்றன. எம்பங்கு குரு தொண்டிலே

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

# மன்னார் மறைவட்டத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

● அருட்திரு தி. நவரெட்ணம்

## வளரும் விருட்சம்

ஈழத்தில் கிறிஸ்தவத்தின் வேதவித்து 1505ல் போத்துக்கேயரால் ஊன்றப்பட்டது. சில பாறை நிலத்தில் விழுந்தன. சில வழியோரமாகவும், முட்புதர்கள் மத்தியிலும் விழுந்தன. சில மிகச் செழிப்பான நல்ல நிலத்திலும் விழுந்தன. சில தீய்ந்து போயின, சிலவற்றை பகைவன் நெருக்கி அழித்துவிட்டான். நல்ல நிலத்தில் விழுந்தவை இன்றும் வளர்ந்துகொண்டே இருக்கின்றது.

இவ் விசுவாச வளம் பொருந்திய நிலப்பரப்பில் மன்னார் முன்னிடம் பெறுவதை நாம் பெருமையோடு குறிப்பிடுகிறோம். அக்காலத்தில் யாழ்ப்பாணம் ஓர் சுதந்திர அரசாக மன்னாரையும் வடபகுதியின் ஏனைய பகுதிகளையும் உள்ளடக்கி இருந்தது. இதன் அரசன் நற்செய்திப்பணியை பல்வேறு காரணங்கட்காக எதிர்த்து வந்தான், எனவே மறைபோதகர்கள் (பிரான்சிஸ்க்கன் சபையினர்) மாறுவேடத்தில் சிறந்த தொண்டாற்றினர். இது மன்னாரில் சிறந்த பலன் அளித்து பலர் கிறிஸ்தவமறையை தழுவினர். 1544ம் ஆண்டின் இறுதியில் ஆத்திரமுற்ற சங்கிலி அரசன் படையுடன் வந்து ஆண், பெண், குழந்தைகள் உட்பட 600 பேர்வரை வாளுக்கிரையாக்கினான். இதனால், இவர்கள் குருதியினால் எம் மண் இன்னும் வளம் பெற்றது. இவ்வுயிர்த்தியாகத்தின் பயனாக விசுவாசம் இன்னும் விருத்தியடைந்தது. இனனும் பலர் கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டனர்.

ஒல்லாந்தர் காலத்தில் பல்வேறு இன்னல்களை அனுபவித்த பொழுதும், 30 ஆண்டுகட்கு மேலாக குருக்களின் வழிநடத்துதல் இன்றி இருந்தாலும் எம் மூதாதையரின் விசுவாசம் உறுதியாய் இருந்தது, அதற்கு சான்றுபகர்கின்றது சர்வதேச புகழ் பெற்ற மடுத்திருப்பதி. இந்நேரத்தில் வணக்கத்துக்குரிய யோசேவ்வாஸ் அடிகளாரின் வருகை மன்னார் திருச்சபைக்கும் புத்தொளியூட்டியது. பிரித்தானியரின் ஆட்சியில் கிடைத்த மதச் சுதந்திரத்தினாலும். ஒறெற்றோறியன், ஐரோப்பிய மறைப் போதகர்களினதும் அயரா உழைப்பாலும் மேலும் வளர்ச்சி அடைந்தது.

1557ல் இலங்கை கொச்சின் மறைமாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது. 1834ல் தனித்த அப்போஸ்தலிக்க மறைமாவட்டமானது. பின்னர் 1847ல் கொழும்பு, யாழ்ப்பாண மறைவட்டங்களாக பிரிக்கப்பட்டது. யாழ். மறைவட்டம் வடக்கு, கிழக்கு, வடமத்திய, வடமேற்கு மாகாணங்களை உள்ளடக்கி இருந்தது. 1975 வரை பல பகுதிகள் பிரிக்கப்பட்டு பல்வேறு மறைவட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. திருமலை, சிலாபம், அனுராதபுரம், போன்ற மறைவட்டங்கள், தாய் யாழ்த்திருச்சபையின் பிள்ளைகள் எனக் குறிப்பிடுவது பெருமையே. இறுதியாக அத்தாய் வவுனியா மன்னார் நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய கிறிஸ்தவ பெருமை சார் மன்னார் மறைவட்டத்தை பெற்றெடுத்தாள், பேருவகை கொண்டாள்.

1976ம் ஆண்டுமுதல் மன்னார், தனி மறைவட்டமாக்கப்பட வேண்டும் என்ற கருத்து யாழ் ஆயரிடமும், குருக்களிடமும் குறிப்பாக இறைமக்களிடமும் வலுப்பெறலாயிற்று. பல்வேறு முயற்சிகளும், செபங்களும். இறைமக்களால்மேற்கொள்ளப்பட்டன. யாழ் ஆயர் மிக வேகமாக செயற்பட்டாலும் பரப்பு விஸ்திரணத்தினால் அடிக்கடி இறைமக்களை சந்திக்கவும், ஊக்கப்படுத்தவும். உறுதிப்படுத்தவும் பல தடைகள் ஏற்பட்டன. அனைத்தையும் கருத்திற்கொண்டு ஆவியினால் தூண்டப்பெற்று எமது அப்போதய அப்போஸ்தலிக்க தூதுவராக பாப்பிறை 2ம் அருள் சின்னப்பரால் 1981ம் ஆண்டு தைத்திங்கள் 24ம் நாள் மன்னார் புதிய தனி மறைவட்டமாக உருவாக்கப்பட்டது. அதன் முதல் ஆயராக அருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளாரையும் அவர் நியமித்தார். அதைத் தொடர்ந்து அன்னார் ஆடி 31ம் நாள் ஆயராக அபிஷேகம் பெற்று ஆவணி 2ம் நாள் ஆயர் தனது மணவாட்டியை கரம் பிடித்தார். இறைமந்தையை பொறுப்பேற்றார், அன்றிலிருந்து பல்வேறு துறைகளிலும் பூத்துக் குலுங்கத் தொடங்கியது எமது மறைவட்டம்.

## ஆயர்

''அனைத்தும் நற்செய்திக்காக'' என்னும் விருதுவாக்குடன் எமது ஆயர் இன்றுவரை அறிவுடனும், ஆற்றலுடனும், விவேகத்துடனும், ஆன்மீக பலத்துடனும் இறைமக்களை வழிநடத்தி வந்துள்ளார். ஆடம்பரம் அல்ல அடக்கம், கண்டிப்பு அல்ல கனிவு, உளவு அல்ல உறவு, தன்னலம் அல்ல பொதுநலம், இவைகள் இவரின் நற்பண்புகள். இவரின் மறையுரையை சிறுவர் முதல் ஒவ்வொருவரும் தேனமுதமென பதினொரு ஆண்டுகளாக பருகி மகிழ்ந்தனர். பாதிக்கப்பட்ட மக்களை பரிவுடன் நாடிச்சென்று உற்சாகப்படுத்தி தேற்றி வருபவர். தன் பணியில் ஏற்படும் இடர்களை என்றும் தடையாகக்கருதாது விவேகத்துடன் கடந்து தன் மந்தைகளை காத்து வழிநடத்தியவர். இன்று அவரின் பிரிவு இது வரை மன்னார் மறைமாவட்டம் சந்தித்திருக்காத பேரிழப்பாகும்.

## குருக்கள்

மறைவட்டம் 11 மறைமாவட்டக் குருக்களுடன்தான் ஆரம்பமானது. எம்முடன் இணைந்து பல யாழ் மறைமாவட்டக் குருக்களும் அமல மரித்தியாகிகளும் பணியை முன்னெடுத்துச் சென்றனர். அதன் பின் 18 பேர் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டுள்ளமை எமது வளர்ச்சிக்குத் தக்க சான்று. பெரிய குருமடத்தில் இறையியல் மாணவர்கள் 9 பேரும், மெய்யியல் மாணவர்கள் 12 பேரும், பயிற்சி பெற்றுக் கொண்டிருப்பது எதிர்கால நம்பிக்கையை ஊட்டுகின்றது.

## சிறிய குருமடம்

1988 வரை சிறுவர்கள் குருமடப் பயிற்சிக்கு யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டனர். எம் திருச்சபையின் எதிர்காலத்தை முன்னிட்டு சிறிய ஆயத்தத்துடன் 11 மாணவர்களுடன் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட வீடொன்றில் குருமடம் ஆரம்பமானது. என்றும் எம்மையும், எம் மறைமாவட்டத்தையும் பாதுகாக்கும் மடு அன்னையின் நாமம் அதற்குச் சூடப்பட்டது, ''மடு மாதா சிறிய குருமட'' மாணவர்களை அனுபவமும் ஆற்றலும் கொண்ட எம் மூத்த தலைவர் அருட்திரு. சேவியர் குருஸ் அடிகளார் அவர்கள் பயிற்றுவிக்கும் பொறுப்பை ஏற்றார். இன்று இடவசதி கருதி இடமாற்றலாகி திருமறைப்பணி நிலைய கட்டிடத்தில் 22 மாணவர்களுடன் வெற்றி நடை போடுகின்றது. விரைவில் காலம் விடை கொடுக்கும் பொழுது புதிய நிரந்தர இல்லம், எமது கல்லூரிக்கு அருகாமையில் அமையும். அழைப்பிற்கு செவிசாய்க்க எத்தனையோ உள்ளங்கள் காத்திருக்கின்றன.

## பங்குகள்

பங்கின் வளர்ச்சிதான் இறை அரசின் அடையாளம். பங்கின் பெருக்கம் மறைவட்டப் பணியின் சிறப்பிற்கு அடையாளம். 15 பங்குகளுடன் (மடுப்பதி தவிர) ஆரம்பமானது மறைமாவட்டம். இங்குள்ள பங்குகள் குறிப்பாக பெருநிலப்பரப்பு, வவுனியா, இவைகளைச் சேர்ந்தபங்குகள் பெரும் தொகையான கிராமங்களை உள்ளடக்கி ஒரு பங்குத்தந்தையின் பணியை முழுமையாகப் பெறமுடியாததாகி இருந்தது, இறைமக்களுக்கு சிறந்த பணியாற்றும் பொருட்டு ஆட்காட்டிவெளி, ஓமந்தை, மடுறோட், தேவன்பிட்டி ஆகிய 4 புதிய பங்குகள் தோற்றுவிக்கப்பட்டன. இன்னும் பிரிந்து உருவாக்கப்பட வேண்டிய பங்குகள் உண்டு குருக்கள் தொகையைப் பொறுத்து காலம் வரும் பொழுது இன்னும் பல பங்குகள் மலரும்; பணி சிறக்கும்.

## வாழ்வுதயம்

எமது சமூக பொருளாதார அபிவிருத்தி நிலையம் 1981ம் ஆண்டு இயக்குனர் அருட்திரு ஜெ. பி. தேவராஜா அவர்களின் வழிநடத்துதலில் ஆரம்பிக்கப்பட்டது மடுத்திருப்பதியில் அதன் காரியாலயம் 1885 வரை இயங்கிவந்தது. பின்னர் அருட்திரு. ஒல்பன் இராஜசிங்கம் தலைமையில் 1985ல் புனித செபஸ்தியார் பேராலய வளவிற்கு இடம்மாறி தற்பொழுது சொந்தக் காணியில், சொந்தக் கட்டடத்தில் பெருமையுடன் இயங்கிவருகின்றது.

(தொடர்ச்சி 7ஆம் பக்கம் )

# மாண்புறு மன்னார் முதலாயர்



புதிதாக மலர்ந்த 'மன்னார் மறைவட்டத்தின் முதல் ஆயராக அருட் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்' என்ற மங்கலச்செய்தி மன்னார் மறைவட்டத்தை வந்தடைந்தது. மன்னார் மக்கள் மனமகிழ்வு அடைந்தனர். ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். தேவ தொண்டாற்ற வந்த ஞான விஞ்ஞானியை வரவேற்க நாள் பார்த்துக் காத்திருந்தனர்.

30-07-81ல் வண்ண மடுப்பகுதியிலே, கோயில் கொண்ட அன்னையின் முன், யாழ்ப்பாணம், திருமலை, மட்டக்களப்பு, மன்னார், வவுனியா உட்பட இலங்கையின் எட்டுத்திக்குகளிலும் இருந்து மக்கட் பெரு வெள்ளம் கரைகாணா அளவுக்கு ஒன்று கூடியது. தமிழ் இசையாம் நாதஸ்வர வாத்தியம் இசை முழங்க, ஆலய மணிகள் ஆர்ப்பரிக்க, தலைமை ஆயர் பேரருட் திரு வ. தியோகுப்பிள்ளை மற்றும் ஆயர்கள் நிக்கிலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ, பிராங் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆகியோரும் நூற்றுக்கணக்கான குருக்களும் புடைசூழ்ந்து நின்றனர்.

யாழ் ஆயர் பேரருட் திரு. வ. தியோகுப்பிள்ளை 'ஆயர் திருநிலைப்படுத்தல் சடங்கை' நிறைவேற்றி வைத்தார்.

நாட் பார்த்துக் காத்து இருந்த மன்னார் மாநில மக்கள் அணிதிரண்டு வீதிகளை அலங்கரித்து, பாவிசைத்து புதிய ஆயரை இனமத வேறுபாடு இன்றி, வரவேற்றனர். இந்துக்களும், இஸ்லாமியரும் காட்டிய ஆர்வம் அளவிடற்கரியது. ஆயருக்குக் கிடைத்த இவ் வரவேற்பு ஆயரின் மாண்பினை அவனிக்கு எடுத்துக் காட்டியது.

சத்தியத்துக்காக வெட்டுண்டு, குருதி சிந்திய மக்கள் உயிர் துறந்த தோட்டவெளிச் சாரலில், நமது ஆயர் அவர்கள் தமது ஆயர் பணிமனையை நிறுவி, அங்கிருந்து மன்னார்த் திருச்சபையின் பங்குக் குருக்களின் துணையோடு தமது இறைபணியைத் தொடக்கினார்.

தாம் வழிநடத்தப்போகும் இறைவனின் மந்தையை ''அனைத்தும் நற்செய்திக்காகவே'' என்ற பெருநோக்குடன் வழிநடத்த முற்பட்டார். கத்தோலிக்க பாடசாலைகளில் மறைக் கல்விக்கு புத்துயிர் ஊட்டவும், இளைஞர் மத்தியில் சமய பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்தவும், மடு அன்னையின் ஆலயத்துக்கு புதுமெருகு ஊட்டவும். பங்குத் தளங்களைப் பெருக்கி, மறைபரப்புப் பணியை விரிவாக்கவும், திட்டம் வகுத்தார். வகித்த திட்டத்தை வீறுகொண்டு செயலாற்ற முற்பட்டார். ஐயகோ! எரிமலை வெடித்துக் கிளம்பியது போன்று, இக்கட்டான அரசியல் நெருக்கடி - பேரதிர்ச்சி, அவரது கனிந்த இதயத்தைத் தாக்கியது. ஆயரோ தேவ ஆவியின் பலத்தினால் வலிமை பெற்று, தலைநிமிர்ந்து - ஆண்டவரிற் கொண்டுள்ள நம்பிக்கையால் - மனம் தளராது தொடர்ந்து செயற்பட்டார். தமது வாழ்வினால் சிலுவைக்கு சான்று பகர்பவர் ஆனார்.

பங்குத் தளங்களில்ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளால் பங்கு மக்கள் தமது வதிவிடங்களை விட்டு மடுத் திருப்பதி நோக்கி ஓடிப்போயினர். சில பங்குத் தளங்களில் ஆலயமணிகள் ஒலிக்கவில்லை, வழிபாடுகள் நின்றுபோயின. ஆயர் மனமுடைந்தார், இவ் வேறுபட்ட சூழ்நிலைகளிலும் தம் எசமானின் ஊழியத்தில் பிரமாணிக்கமுள்ள பணியாளனாக மக்களின் தேவைகளை அறிந்து, அரசாங்க உதவி பெற்று பூர்த்தி செய்ததுடன் அவர்களின் நலனுக்காக அரும் பாடுபட்டுத் தொண்டாற்றினார்.

நிரந்தர சமாதானத்துக்காக ஆயர்களோடும், அரசியலாளரோடும் தொடர்பு கொண்டு செயலாற்றியதை அநேகர் அறியமாட்டார்கள். காலத்தின் கோலத்தினால் மன்னார் திருச்சபை நிலைகுலையவில்லை. வேத சாட்சிகளின் இரத்தம் வீண்போகவில்லை. எங்கெல்லாம் பங்கு மக்கள் சென்று வருகின்றனரோ அங்கெல்லாம் பங்குத் தளங்கள் விரிந்து விசாலித்து இருக்க, ஆயர் அவர்களைச் சென்று தரிசித்து இருப்பது, மனத்தை உருக்குவதாய் உள்ளது. மக்களும், பங்கு மக்களும் தமது ஆயருக்கு மனப்பூர்வமான வரவேற்பையும், மரியாதையையும் செலுத்திக் கொண்டே இருக்கின்றனர். இறைவனின் நம்பிக்கை மக்கள் மனதில் முன்னையை விட ஆழமாக வேரூன்றி நிற்பதனையே இது காட்டுகின்றது. இதற்கு எம்மை விட்டு யாழ் செல்லும் ஆயரே காரணர் ஆவார்.

வாழிய ஆயர் பணி!

P. பெனடிற்

அதிபர் விடத்தல்தீவு

காலத்துக்கேற்ற ஒரு கண்ணோட்டம் ★ கரவையூர்ச் செல்வம்

# ஆயர் ஓர் ஊக்குபவர் (An Animator)

> எப்படிப்பட்ட ஆயர்கள் எமக்குத் தேவை?
> — என்ற வினாவின் அடிப்படையில், ஒரு சமூக உளவியல் நோக்கிலும் ஓர் உள ஆன்மீக இயல் நோக்கிலும் எழுந்த சிந்தனைகள்......

## முன்னுரை:

‘‘புதிய ஆயர் யார்?’’ – பல மாதக் கேள்வி ஓய்ந்து விட்டது ‘‘இவர் தான்’’ – என்ற பின்னர் எழுந்த எதிரொலிகள் இன்னமும் ஓயாமல் இருக்கலாம். ஆனால், நாம்கேட்க வேண்டிய ஒரு முக்கியமான கேள்வியை நாம் கேட்டதாகத் தெரியவில்லை. நான் அக்கேள்வியைக் கேட்கின்றேன். அதன் பயனாக என்னுள் எழுந்த எண்ண அலைகளுக்கு எழுத்து வடிவம் கொடுக்க முனைகிறேன்.

## எப்படிப்பட்ட ஆயர் தேவை?

எப்படிப்பட்ட ஆயர் எமக்குத் தேவை? அதுவும், எஞ்சிய 90களுக்கும், அதன் பின்னரும் எவ்வகைப்பட்ட ஆயர்கள் எமக்குத் தேவை? இவ்வினாவிற்கு திருச்சபையின் சட்டநூலைப் படித்து ஒரு நிறுவனம் கோணத்தில் இருந்து பதில் சொல்லலாம். திருச்சபையின் பாரம்பரியத்தில் இருந்து பதில்சொல்லலாம். இரண்டாம் வத்திக்கான் சங்கத்துப் பின்னணியில் உருவாகிய மறையியல் வழி நின்றும் பதில் சொல்லலாம். இவையெல்லாம் தவறல்ல; பொருத்தமானவையே. ஆனால் நான் வேறோர் கோணத்தில் இருந்து ஆயர்களைப் பார்க்க விரும்புகிறேன். 90களுக்கும் அதன் பின்னரும் என்று சொல்லும் பொழுது நான் காலத்தைக் கோடிட்டுக் காட்டுகிறேன். ஆகவே முதலில் எப்படிப்பட்ட காலம் என்று கணித்துக் கொள்வது அவசியம். காலம், இடம், சூழல் மக்கள் தேவை அறிந்து இக்கால – இடச்சூழல் மக்கள் தேவைகளுக்கு எப்படிப்பட்ட ஆயர்கள் தேவை என்று சிந்திக்க முயல்கின்றேன்.

## ஒரு போர்க்காலப் பின்னணி

> இன்றைய வினாக்களுக்கு
> நேற்றைய பதில்கள்
> விடையாகா

கடந்த ஒன்பதாம் ஆண்டுகளாக நடைபெற்ற– முடிவுறாது இன்னமும் தொடரும் – இக்கொடிய போரினால் வடகிழக்கு மாகாணங்கள் எப்படிப் பாதிக்கப்பட்டுள்ளன? புதிய ஆயருக்கு – மன்னார் மறை வட்டம் எப்படிப் பாதிக்கப்பட்டுள்ளது? இப்போரினால் இத்தீவு எப்படிப் பாதிக்கப்பட்டுள்ளது? இப்பாரிய பாதிப்புக்களினால் ஏற்படும் விளைவுகள் என்ன? அதுவும் குறுகிய கால விளைவுகள் எவை? நெடிய கால விளைவுகள் எவை?

இவ்வினாக்களுக்கு, சமூக அரசியல்ரீதியாக, சமூகப் பண்பாட்டு ரீதியாக, சமூக உளவியல் ரீதியாக, சமூக மதவுணர்வுடமை ரீதியாக பதில்தேட வேண்டும். அப்படிபட்ட ஓர் ஆய்வுக் கட்டுரைக்கு இது இடமல்ல. ஆனால் ஈழத்து ஆயர் குழு அப்படிப்பட்ட ஓர் ஆய்வை அவசியம் நடத்த வேண்டும். மாறிவரும் ஒரு சமூகத்தின் மாறுந்தன்மையைப் புரிந்து கொள்ளாது சென்ற நூற்றாண்டின் வழிபாட்டு முறைகளையும், பணிவகைகளையும் தொடருவதினால் அன்றேல் கூட்டுவதினால் பயனேதுமில்லை. இன்றைய வினாக்களுக்குநேற்றைய பதில்கள் விடையாகா. புதிய பிரச்சனைகளுக்குப் பழைய தீர்வுகள் தீர்வாகா. கடந்த பல ஆண்டுகளாக வளர்ந்து விட்ட மானிட விஞ்ஞானங்களை புறக்கணிக்கமுடியாது. மானிட விஞ்ஞானங்களுடன், இரண்டாம் வத்திக்கான் சங்கப் பின்னணியில் உருவான மறையியல் இணையவேண்டும். உளமறையியல் (Psychotheology) – அல்லது இன்னும் பொருத்தமாக உள ஆன்மீக இயல் (Psychospirituality) –மானிட மறையியல் (anthropological theology)–என்ற புதிய துறைகள் உருவாக வேண்டியது அவசியம். இப்படிப்பட்ட ஒரு பின்னணியில் நின்றே நான் சிந்திக்கின்றேன்.

## இடைநிலைக் காலம்

> இழப்புக்களுக்கு வருந்தி
> இந்த இழப்புக்களை
> இழப்பாகவே நினைந்து
> அவற்றைக் கைவிடவேண்டும்.

இப்போர் தொடங்கிய 1983ஆம் ஆண்டு தொட்டு இன்றுவரை ஓர் இடைநிலைக் காலம் (transition stage) என்றே சொல்லவேண்டும். போரும் தொடர்வதினால் இந்த இடைநிலைக் காலம் எவ்வளவு காலத்திற்கு நீடிக்குமென்பதை உளச் சமூக வரலாறுதான் சொல்லவேண்டும். இடைநிலைக் காலத்தின் அறிகுறிகள்: சீர்குலைந்த நிலை, குழம்பிய தன்மை, பல்வேறு வகைப்பட்ட நிரந்தர இழப்புக்கள், மாறிவரும் தன்மை, எதிர்பார்ப்புக்கள் நிறைந்த நிலை, நிச்சயமற்ற தன்மை, மாறும் மதிப்பீடுகள், புதிய அவசரத் திணிப்புக்கள் அவசர முடிவுகளினால் ஏற்படக்கூடிய குறுகிய – நெடியகால விளைவுகள் – என்று பல.

இதுவரை காலமும் நாம் வாழ்ந்து அனுபவித்த ‘‘பொற்காலம்’’ வராது. அந்த ‘‘நல்ல நாட்கள்’’ வரலாறாகி விட்டது. ‘‘அந்த நாள்’’ ஞாபகங்கள் வெறும் நினைவுகளே. ‘‘மீண்டும் றெயில் ஓடுமா?’’ ஓடினாலும், அதே சூழலில் ஓடாது. இழப்புக்களுக்கு வருந்தி அந்த இழப்புக்களை இழப்பாகவே நினைத்து அவற்றைக் கைவிடவேண்டும். இது ஓர் உளவியல் கூற்று. நாம் பழக்கப்பட்ட வடகிழக்கு மாகாணங்களுக்கு, நாம் பழக்கப்பட்ட மறைவட்டப் பழக்க வழக்கங்களுக்கு, நாம் பழக்கப்பட்ட இத்தீவின் சூழலுக்கு நாம் ‘‘பிரியும் விடை’’ ஒன்று கூறி வழியனுப்பு விழாவொன்று வைத்து, அவற்றை முற்றாக விட்டுவிடவேண்டும். அப்பொழுதுதான் புதிதாக மலரும் நாட்டிற்கு, மறைவட்டத்திற்கு நாம் எம்மைக் கொடுக்கலாம். அது மட்டுமன்றி, நாம் ஒரு இடைக்கால கட்டத்தில் நிற்பதால், மலர இருக்கும் புதிய சூழலை, பண்பாட்டை, மறைவட்டத்தை, நாட்டை புதிய திசையில் வளர்க்கும் பணியில் நாமும் ஒரு பங்கு வகிக்கலாம். நாளை நமதென்ற சொந்தம் கொண்டாட விரும்பினால், இன்றைய பிரசவ வேதனையில் நாம் பங்கு கொள்ள வேண்டும். மாற்றத்தின் முகவர்களாக நாம் வாழவேண்டும். இப்படிப்பட்ட ஒரு மாற்றத்தில், வேதனையில், பழமைக்கு விடைகொடுத்து, புதிய தோற்றத்துக்கு எம்மை தயார் செய்யும் பணியில் ஆயர் மக்களுடன் இணைந்து நிற்கவேண்டும். முரணாக தம்மைப் புறப்படுத்தி, எங்கோ ஒரு விழிம்பில் நின்று கொண்டு ‘‘மந்தையைக்’’ கூவி அழைக்கும் ஆயர்கள் நிற்பார்களானாகில், மந்தையற்ற ஆயர்களாக நிற்பார்களாகில். மந்தையற்ற ஆயர்களாக அவர்கள் தம்மையே புறப்படுத்திக் கொள்வர். அரசற்ற அரசனாக அர்த்தமற்ற வெறும் செங்கோல் துணையாகத் தனித்து நிற்க வேண்டிவரும்

## மாறிவரும் எங்கள் தமிழ்ச் சமூகம்

> இந்த அழுகுரல்
> இந்தத் தேடல்
> இந்த அலைச்சல்
> ஆயர்களுக்குக்
> கேட்கவேண்டும்.

சமூக அரசியல், சமூகப் பண்பாடு, சமூக உளவியல் சமூக மதவுணர்வுடமை ரீதியாக ஏற்படும்– ஏற்படவிருக்கும் பெரும் மாற்றங்கள் அனைத்தையும் இங்கு விரிவாகக் கூறிவிட முடியாது. ஆனால் ஒரு சிலவற்றையாவது சுட்டிக் காட்டி மாறிவரும் சமூகத்தின் மாறுந்தன்மையை திருச்சபை புறக்கணிக்க முடியாது என்று வற்புறுத்த விரும்புகின்றேன்.

இந்தப் போரினால் இந்நாட்டு அரசியல் அமைப்பு மாறப்போகின்றது. அரசியல் சட்டங்களில் மாற்றங்கள் ஏற்படப்போகின்றன. இதனால் சமூக அமைப்பில் பெரும் மாற்றங்கள் ஏற்படும். இம் மாற்றங்கள் இத் தீவையே பாதிக்கும்.

மூன்று இனங்களிடையே– சிங்களம், தமிழ், முஸ்லீம்– ஏற்பட்ட வெறுப்புணர்ச்சி பகைமைஉணர்ச்சி, நம்பிக்கை அற்ற தன்மை, சில தலைமுறைகளைப் பாதிக்கும். மூன்று இனங்களிலும் ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் துவக்குத் தூக்கி ஒருவரை ஒருவர் கொன்றுள்ளார்கள். வன்செயல் சமூகம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அரசியல்வாதிகள் வேண்டுமென்றே இந்த வன்செயலை வளர்த்துள்ளார்கள். ஆலயங்களிலும், கோயில்களிலும் பக்திப் பரவசத்தோடு வழிபாடு செய்து கொண்டே கொலைகளுக்கு காரணமாக இருந்திருக்கிறார்கள், அரசியல்– மதத் தலைவர்கள். இந்த வேஷங்கள் மக்களின் சிந்தனையைப் பாதிக்கும்.

ஓர் உயிருக்காக, நாட் கணக்கில், மாதக்கணக்கில் அழுது வருந்திய இந்தச் சமூகம் இன்று ஆயிரக்கணக்கான இழப்புக்களைப் பார்த்து உணர்விறுகி மனமிறுகி வாழுகின்றது. இன்று வருந்தாத்தன்மை நாளை இந்தச் சமூகத்தை பெரிதும் பாதிக்கும். உயிருக்கு அன்று நாம் கொடுத்த மதிப்பு இன்று உண்டா? நூற்றுக்கணக்கான இளம்பெண்கள் போர்க்களத்தில் முன்னின்று போராடுகின்றார்கள். பெரும்பான்மையான பெண்கள் கல்வியில் ஆண்களை விட முன்னிற்கின்றார்கள். விகிதாசாரத்திலும் பத்திற்கு ஒன்றென பெண்கள் தானே முன்னிற்கின்றார்கள், இவையெல்லாம் எமது சமூகப் பண்பாட்டை எப்படி எப்படி எல்லாம் பாதிக்குமோ!? எமது போர் ஒரு வனாந்தரத்திலோ, அன்றேல் எங்கோ காடுகளிலோ நடைபெறவில்லை: எங்கள் வீடுகளிலும், எங்கள் சந்தைகளிலும், எங்கள் தெருக்களிலும் நடைபெறுகின்றது. ஆகவே இப் போர், போராளிகளை மட்டுமல்ல, அவர்களின் குடும்பங்களை மட்டுமல்ல, எங்கள் அனைவரையுமே பாதிக்கும். கொலைகளையும், கற்பழிப்புக்களையும், அழிவுகளையும் நேரடியாக அனுபவித்த குழந்தைகள் வெகுவாகப் பாதிக்கப்படுவார்கள்.

கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்த இந்தத் தமிழ்ச் சமூகம், இன்று வாய்ப்புக்களை இழந்து நிற்கின்றது. எம்மிடையே இருந்து கற்றுத் தேறிய பல கற்றோர் எம்மை விட்டுச் சென்று விட்டார்கள்.

எமது பண்பட்ட மதிப்பீடுகள், பழக்க வழக்கங்கள் பல மாறிவருகின்றன. பழமையில் ஊறி வளர்ந்த சிந்தனைகள் மாறுகின்றன. இலக்கியம் மாறுகின்றது, நாடகம் மாறுகின்றது, கவிதைகள் மாறுகின்றன, மக்களின் பேச்சுக்கள் மாறுகின்றன.

இம்மாற்றங்கள், இப்பாதிப்புக்கள் எம்மைத் தொடாது விடாது, நாம் சுற்றி வளைத்து நெடுங்காலத்திற்கு வாழ முடியாது. சடங்குகளும், வாய்ச் செபங்களும் (மந்திரங்கள்) நிறைந்த வழிபாடுகளில் நாம் நெடுங்காலத்திற்கு ஒளிய முடியாது.

அரசியல் சுதந்திரத்திற்காக மட்டுமல்ல, பொருளாதார விடுதலைக்காக மட்டுமல்ல, மதச் சுதந்திரத்திற்காகவும் ஆன்மீகச் சுதந்திரத்திற்காகவும் மக்கள் அழுகின்றார்கள். உள்ளத்து அமைதி தேடி மக்கள் அலைகின்றார்கள். இந்த அழுகுரல், இந்தத்தேடல், இந்த அலைச்சல் ஆயர்களுக்குக் கேட்க வேண்டும்.

## மாற வேண்டிய உருவகம்

> மக்களின் முழுமையான
> விடுதலைக்கு வழிகாட்டும்
> ஒரு வழித்துணைவனாக
> அம்மக்களை உள்ளிருந்து
> ஊக்குபவராக ஆயர்
> பணி உருவாக வேண்டும்.

ஆயனின் குரல் கேட்டு மந்தை செல்வது வேறு, மந்தையின் அழுகுரல் கேட்டு வேதனை கேட்டு, ஆயன் மந்தையைத் தேடி வருவது வேறு. மக்களோடு மக்கள் மத்தியில் வாழ்ந்து, அம்மக்களின் அழுகைக் குரலைக் கேட்டு, அம்மக்களின் விடுதலை வேட்கையைப் புரிந்து கொண்டு, அவர்களின் முழுமையான ஒரு விடுதலைக்கு வழிகாட்டும், ஒரு வழித்துணைவனாக, அம்மக்களை உள்ளிருந்து ஊக்குபவராக ஆயர் பணி உருவாக வேண்டும். இது, 90களின் தலைமைத்துவம். ஆகவே, ஆயர்கள் பின்னின்று மந்தையை விரட்டுபவர்களும் அல்ல, முன்னின்று குரல் கொடுத்து அழைப்பவர்களும் அல்ல. ஆயர்களின் குரல் மந்தையின் குரலைப் பிரதிபலிக்கவில்லையென்றால், ஆயர்களின் குரல் மந்தையின் உணர்வுகளைப் புரியவில்லையென்றால் அக்குரல் மந்தைகளால்

புறக்கணிக்கப்படும். நோய்க்குரிய மருந்தேயொழிய, மருந்துக்கேற்ற நோயைத் தோற்றுவிப்பதில்லை.

“ஆயன்-மந்தை” உருவகம்/அடையாளச் சின்னம் இனிவரும் காலத்திற்குப் பொருந்தாது. மக்களுக்கு அடையாளச் சின்னங்கள், உருவகங்கள் அவசியந்தேவை. ஆனால், அவை காலத்தோடு ஒட்டியவையாக, காலத்தின் தேவைகளைப் பிரதிபலிப்பவையாக இருக்க வேண்டியது அவசியம். பண்பாட்டுமயமாக்குவோர் இதை அவதானத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய ஒன்று. “ஆயன்-மந்தை” உருவகம், இன்றைய உலகிற்கு, மாறிவரும் சமூகப் பண்பாட்டிற்கு ஒத்துவராது, பொருள் தராது. காலத்திற்குப் பொருத்தமற்ற சின்னம்.

பின் நின்று தள்ளும் தலைமைத்துவமும் அல்ல, முன்னின்று அழைத்துச் செல்லும் தலைமைத்துவமும் அல்ல; ஆனால், உள்நின்று ஊக்குவிக்கும் தலைமைத்துவமே 90களில் தேவை, வாய்பேசாது தலைகுனிந்து பின்சென்ற மக்களினம் (மந்தை) இன்று இல்லை. எதிர்த்துப்போராடும் ஓரினம் தோன்றிவிட்டது. நாம் சொல்வனவை தான் மக்கள் தேவை என்று செய்யப்பட்ட காலம் போய்விட்டது. இன்று மக்கள் குரல் எழுப்புகிறார்கள். ஆயர்கள் அக்குரலுக்கு செவிமடுப்பார்களா? புதிய உருவகங்களைத்தோற்று செங்கோல் எவ்வடிவிலும்விப்பார்களா?

## ஆயர்கள் தீர்க்கதரிசிகள்

**ஆழமான ஆன்மீகப் பிரசன்னத்தைக் கொடுப்பவர்கள் ஆயர்கள்.**

மக்களோடு இணைந்து வாழும் பொழுது தான் மக்களின் உணர்வுகளைத் தன்னுணர்வால் புரிந்துகொண்டு. அவர்களின் மனித வளர்ச்சிப் பயணத்தில் துணைப்பயணியாக ஆயர்கள் பயணஞ்செய்யலாம். மக்களின் இன்றைய உணர்வுகளை, ஏக்கங்களை, இழப்புக்களை, எதிர்பார்ப்புக்களை, கனவுகளை, நம்பிக்கைகளை அறிந்து புரிந்துகொண்டால்தான் ஆயர்களுக்கு அம்மக்கள் சார்பாக தீர்க்கதரிசனப் பார்வைகள் தோன்றும். பிறிதோர் இடத்தில் தீர்க்கதரிசிக்கு நான் இலக்கணம் கூறியுள்ளேன். மக்களின் இன்றைய வாழ்வை நாடிபிடித்துப் பார்த்துஉணர்ந்த (உன்னிப்பான ஆழமான கேட்கும் தன்மையை வளர்த்து). கடந்த கால நிகழ்வுகளின் வரலாற்றுப் பின்னணியில் நிகழ்வுகால நிகழ்வுகளை ஆராய்ந்து, மக்களின் இன்றைய தேவைகளையும் எதிர்காலத்தேவைகளையும்எடுத்துரைத்து அவற்றிற்குப் பதில் கூற முனைவதுதானே தீர்க்கதரிசனங்கள் (காவலன், 20–03–1992 / கட்டுரை) இப்படித் தீர்க்கதரிசிகளாக வாழ்பவர்கள், தம் மக்களுக்கு ஓர் ஆழமான ஆன்மீகப் பிரசன்னத்தைக் (Contemplative-Presence) கொடுக்கிறார்கள். கிறிஸ்துவின் சீடத்துவத்தின் முழுமையான பணி, இது.

## அழைப்பா? நியமனமா?

இப்படிப்பட்ட தீர்க்கதரிசிகளாக வாழ ஆயர்களுக்கு ஓர் அழைப்பு உண்டா? முதலில். ஆயர்கள் அழைப்பின் நிமித்தம் ஆயர்களானார்களா? அன்றேல், நியமனத்தினால் ஆயர்களானார்களா? நடைமுறையைப் பார்க்கும் பொழுது ஆயர்கள் அமைப்பின் நியமனங்களாகவே தோன்றுகிறார்கள். ஆகவே, நிருவாக அமைப்பில் இது ஒரு தொழிலா? ஆயர்கள் நிருவாகிகளா? குருவென்ற முறையில் ஆயர்கள் வழிபாடுகளுக்கு தலைமைதாங்கும் குரு முதல்வர்களா? துர் அதிர்ஷ்டவசமாக, இத்தனை கேள்விகளுக்கும் பதில் – ‘ஆம்’ என்றுதான் சொல்லவேண்டும். அதுதான் குழப்பம். நிருவாகியாக நியமனம் பெறும் பொழுது, பொதுமக்களும், குருக்களும் துறவிகளும் நிருவாகத் திறமையை ஆயர்களிடம் எதிர்பார்க்கிறார்கள். ஆயர்களின் பதவிகள் திருச்சபை அமைப்பில் அதிகாரத்தைக் கொண்டிருப்பதால், அரசியல்வாதிகள் அவர்களிடம் அரசியல் இலாபங்களைத் தேடுகிறார்கள், ஆயர்கள் குரு முதல்வர்கள் என்ற மட்டில் அவர்களை வழிபாட்டுத் தலைவர்களாக துறவிகளும், குருக்களும் அழைத்த வண்ணமே இருக்கிறார்கள். இங்ஙனம் வெவ்வேறு திசைகளில் இழுபடும் ஆயர்கள் தங்கள் அழைப்பைக் கேட்பது கடினமே. பொதுமக்கள், குருக்கள், துறவிகளின் எதிர்பார்ப்புகளுக்கும் எல்லைகள் வேண்டும்.

## தொடர் அழைப்பு — தொடர் உருவாக்கம்

**மனித விடுதலை உணர்வில் கேட்கும் ஓர் அழைப்பு**

அழைப்பு தொடர்ச்சியான (Ongoing call) காலத்து நிகழ்வுகள் எம்மைத் தாக்க (affect) விடும்பொழுது மக்களின் தேவைகளை உய்த்துணரும்பொழுது (Openness) இறைவன் குரல் அங்கு தொடர்ந்து கேட்கும். நிருவாகத்துக்கு அப்பால், அதிகாரத்துக்கப்பால் – குரு என்ற மட்டில், கிறிஸ்துவின் சீடத்துவம் என்ற மட்டில் ஆயர்களுக்கும் ஒரு தொடர்ச்சியான அழைப்பு இருக்க வேண்டும். இந்த அழைப்பை நிறுவனத்தினால் நிர்ணயிக்க முடியாது. ஆயர்கள் தம்முள் சென்று வாழ்வின் அடிமூலத்துடன் உண்மையின் மூலமுதலுடன் சங்கமமாகும்பொழுது ஏற்படும் மனித விடுதலையுணர்வில் கேட்கும் ஓர் அழைப்பு, அது. ஆயர்களின் தொடர்ச்சியானமனமாறுதலின் (Ongoing conversion) விளைவாக எழும் அழைப்பிலேயே அவர்கள் பணி வழிந்தோட வேண்டும், தொடர் உருவாக்கம் (Ongoing formation) ஆயர்களுக்கும் தேவை. காரணம்: அவர்களுடைய தொடர்ச்சியான வளர்ச்சியிலேயே அவர்களின் பணி ஊறறெடுக்கும்:

கடந்த கோடை விடுமுறையில் ஆறு ஆயர்கள் ஒரு தொடர் உருவாக்கப் பயிற்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்கள். தங்கள் தலைமைத்துவத்திற்கு, தங்கள் ஊக்குவித்தலுக்கு, தங்கள் சொந்த தொடர்ச்சியான வளர்ச்சிக்கு இப்படிப்பட்ட பயிற்சிப் பாசறைகள் தேவை என்று உறுதியாகச் சொன்னார்கள். இது வரவேற்க வேண்டிய துணிச்சலான செயல். (இது நடைபெற்ற– அனைத்துலக தொடர் உருவாக்க நிறுவனம், கென்றீ‘ ஆங்கிலேய நாடு). ஈழத்து ஆயர்களும் இவ்வழி துணிவார்களா?

## ஆயர் ஓர் ஊக்குபவர் (An Animator)

**ஆயர்கள், புதுப்பித்தலின் புதுப்பிறப்பின் முகர்வர்கள்**

பொதுமக்களின் பல்வேறு வகைப்பட்ட குழுக்களை, மறைவட்டக் குருக்கள் குழுக்களை, தேவை ஏற்படின் மறைவட்டத்தில் உள்ள துறவறக் குழுக்களை ஊக்குபவராக ஆயர்கள் வரவேண்டும். ஊக்குபவர்கள் நன்கு செவிமடுக்கக் கூடியவர்களாக இருத்தல் அவசியம். மக்கள் சொல்லும் சொற்களினூடாக சொல்லாத, ஆனால் சொல்ல நினைத்த சொற்களையும். சொல்லிய செய்திகளின் பின்னால் உள்ள சொல்ல நினைத்த செய்திகளையும், அவற்றினூடாக இழையோடும் உணர்வுகளையும், அந்த உணர்வுகளின் அர்த்தங்களையும் அறிந்து புரிந்து கொள்ளும் சக்தியுள்ளபவர்கள் ஊக்குபவர்கள்.

மக்களின் முழுமையான வளர்ச்சிக்கு ஆதரவு கொடுக்கும் அதேவேளை அவர்கள் தங்கள் வளர்ச்சியில் நின்று பின்வாங்குபொழுது அவர்களுக்கு உறுதியான அறைகூவல் விடுப்போராகவும் இருத்தல்வேண்டும்.

மக்கள் ஒருவரோடு ஒருவர் ஆழமான உறவுகளை வளர்க்க ஊக்குவோர் துணை செய்ய வேண்டும். இப்படிப்பட்ட உறவுகளை வளர்க்காது மனித இறைஉறவை எங்ஙனம் வளர்ப்பது? நான் முன்னர் எழுதியதுபோல் (காவலன் 20-03-1992). அர்த்தமற்ற சடங்குகளை வளர்ப்பதும், அச் சடங்குகளில் மக்களை மூழ்கடிப்பதும் பணிகள் அல்ல. ஏன் இன்னும் ஒரு படி மேற் சென்று இப்படியும் கூறலாம்: மக்களை முழுமையாக வளர விடாது (ஒருங்கிணைந்த வளர்ச்சி) தடைசெய்வதற்கும் இச்சடங்குகள் சில வேளைகளில் காரணிகளாகி விடுகின்றன.

வறிய நாடுகளின் வறுமையும், மதவுணர்வுடைமையும் (religiosity) அடக்குமுறைகளாக மாறுவதும் உண்டு. சடங்குகளுக்கும் வெளி அடையாளங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்த காரணத்தினால், அவையே வழிபாட்டின் மையமாக மாறிவிட்டதனால், மக்களின் விசுவாச வளர்ச்சி (faith development மிகவும் பாதிக்கப்படுகின்றது. இங்கெல்லாம் ஆயர்கள் புதுப்பித்தலின் –புதுபிறப்பின் முகர்வர்களாகத் திகழ்தல் மிக அவசியம் கிறிஸ்தவ தீர்க்கதரிசிகளின் பாரம்பரியத்திற்கேற்ப இக்காலகட்டத் தீர்க்கதரிசிகளாகத் தோற்றவேண்டும். கிறீஸ்துவின் புரட்சி, திருச்சபை அமைப்பினுள் தொடரவேண்டுமானால் இந்த அமைப்பினுள் தலைவர்களாக இருக்கும் ஆயர்களினால் தான் முடியும்.

இத்தனைக்கும் அடிப்படையாக மூலதனமாக அமையும் ஓர் உலகளாவிய மானிட ஆன்மீகத்தை ஆயர்கள் வளர்க்காவிடில்......... ஆயர்களின் அழைப்பின் பொருள் தான் என்ன?

# மன்னார் மறை வட்டத்தின் ....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பமுதல் இன்றுவரை இவ்விரு இயக்குனர்கட்கும் கீழ் எமது மறைமாவட்டத்து மக்கள் பல நன்மைகளைப் பெற்றுள்ளனர். குடியேற்றத் திட்டங்கள் (தேவாபுரம், பூமலந்தான்), சுய உற்பத்தித் திட்டங்கள் (பப்படம், ஊதுபத்தி, பற்பொடி, சவர்க்காரம், உப்பு, அரைத்தல், தையல், பன்னவேலைகள்) முதலுதவிப் பயிற்சி (வருடம் தோறும் நடைபெறுகின்றது) தையல் பயிற்சி, லாசாலியன் அபிவிருத்தித் திட்டம் - இளைஞர் கைத்தொழில் (தச்சு உலோக) பயிற்சி, பாலர்பாடசாலை ஆசிரியர் பயிற்சி என்பன குறிப்பிடத்தக்கவை. 1990-ம் ஆண்டில் இருந்து நிவாரணப் பணிகள் முன்னிடம் பெற்றாலும் ஏனைய அபிவிருத்தி முயற்சிகளும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பது பாராட்டுதலுக்குரியது. மிகவிரைவில் எமது மறைவட்ட அச்சகம் வாழ்வுதயத்தால் ஆரம்பிக்கப்பட உள்ளது. எமது பல தேவைகள் பூர்த்தியாகும்.

### திருமறைப்பணி நிலையம்

மறைவட்டம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இன்றுவரை மறைப்பணி பல கட்டங்களில் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றது. பழைய செபஸ்தியார் குருமனையில் ஆரம்பிக்கப்பட்டு மௌனசபைக் கன்னியர் மடம் அமைந்திருந்த இடத்தை தனது சொந்த இல்லமாக கொண்டுள்ளது. அலுவலகம், விடுதி, மண்டபம் ஆகிய வசதிகளை இது கொண்டிருக்கிறது. மறைக்கல்விப்பணி. விவிலியப்பணி, பாடசாலைக் கல்வி, மறையாசிரியர் பயிற்சி என்பன இதன் தலைசிறந்த பணிகளாகவும், இம்முறை தேசிய மட்டத்திலே போட்டிக்குச் சென்று திறமையாகத் தேறினார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. வேதாகம அறிவுப்போட்டி, ஆண்டிறுதிப் பரீட்சை, மறைக்கல்வி வாரம், மறையாசிரியர் தினம், தியானம், கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் என்பன எமது வருடாந்த நிகழ்ச்சிகளாகும். தற்கால சூழ்நிலையில் நிர்வாகச் சிக்கலின் பொருட்டு பெருநிலப்பரப்பில் இப்பணியை அருட்திரு. ஸ்ரனி அன்ரனி அ.ம.தி. அவர்கள் இயக்குனருடன் இணைந்து ஆற்றுகிறார்.

### ஆணைக்குழுக்கள்

எல்லா ஆணைக்குழுக்களும் தமது பணியை செயற்படுத்துகின்றன, ஏற்கனவே பங்குகளில் பாரிய பொறுப்புக்களுடன் இப்பணிகளும். குருக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தாலும், நாட்டு நிலமை சிக்கலானதாக இருந்தாலும் தம்மால் இயலுமான அளவிற்கு ஆணைக்குழுக்களின் பணிகள் இடம் பெறுகின்றன.

எமது வள்ர்ச்சியில் பிரிவினைச் சபைகள் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். ஆரம்பத்தில் கணிசமான தொகையினர் பிரிந்து சென்ற பொழுதும், தற்பொது குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் இவர்களின் முயற்சியினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் எமது மக்களும் விழிப்புணர்வும், பற்றும் கொண்டுள்ளனர் என்பதனையும் குறிப்பிட வேண்டும்.

கடந்த 11 ஆண்டுகளை திரும்பிப்பார்க்கிறபோது எமது வளர்ச்சி மிகமிக உறுதியானதாகவும், நிதானமானதாகவும், சஞ்சலம் அற்றதாகவும் தென்படுகின்றது, இப்பேற்பட்ட வளர்ச்சி எமக்கு முன்னால் உள்ள மிக நீண்ட காலத்தை தெளிவாக நம்பிக்கையோடு பார்ககக் கூடியதாக உள்ளது. இன்றுவரை உள்ள இப்பணிகளை அத்திவாரமாகவே நான் கணிக்கிறேன். இனி நன்கு திட்டமிட்டு இதன் மேல் கட்டி எழுப்புவது ஓரளவு எளிதாகவும் இருக்கலாம். இப்பெருமை நிட்சயமாக எமது ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களைச் சேரும். இவ்வடிப்படையில் புதிய தலைமையின் கீழ் உறுதியான கட்டமாக எமது மறைவட்டம் அமைக்கப்படும் என்பதையும் உறுதியாய் நம்பலாம்.

‘இணைந்து செயற்படுவோம்”

## அன்பான ஒரு ஆயனைப் பிரிகிறோம்

அன்பான ஒரு ஆயனைப் பிரிகிறோம்
எங்கள் வயல்களில் நடந்து திரிந்தவர்
எங்கள் வழக்கிலே பேசும் உறவினன்
சிறுவர்களோடு சிரித்து மகிழ்ந்தவர்
முதியவர்களை முழுமையாய் உணர்ந்தவர்
அன்பான ஒரு ஆயனைப் பிரிகிறோம்... ...

# முப்பணிகளில் ஆயரின் பங்கு

● அருட் சகோதரி லூமினா தி.க

இன்னும் பயணம் செய்து கொண்டிருக்கும் திருச்சபை என்னும் இறைமக்கள் குடும்பத்தைப் புனிதப்படுத்தவும், மேய்க்கவும், அதற்குப் போதிக்கவும் இறைவன் காலத்துக்குக் காலம் ஆயர்களைத் தெரிவு செய்கின்றார். "நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை, நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன்'' (அரு. 15: 16) என்பதற்கேற்ப தமக்குரியவர்களைத் தெரிந்தெடுத்து ஆவியின் ஞானக் கொடைகளாலும், வரங்களாலும் அவர்களை நிரப்புகின்றார். தம் திருமகன் கிறிஸ்துவைத் தலையாகவும் ஆவியானவரை உயிரளிப்பவருமாகவும் இறைமக்களை உறுப்பினராகவும் கொண்டிருக்கும் திருச்சபை என்னும் பாரிய குடும்பத்தை ஆண்டு நடத்திப் புனிதப்படுத்த ஆயர்கள் அழைப்புப் பெறுகின்றனர். கிறிஸ்துவைப் பெரிய தலைமைக் குருவாகவும், சிறந்த போதகராகவும், நல்ல ஆயனுமாகக் கொண்டு புனிதப்படுத்தல், போதித்தல், மேய்த்தல் ஆகிய முப்பணிகளில் கிறிஸ்துவுடன் மிக நெருங்கி இணைந்து செயல்படுகின்றனர். ஆவியினால் அபிஷேகம் செய்யப்படும் ஆயர்கள் குருத்துவத்தின் நிறைவை முழுமையாக அனுபவிக்கின்றனர்.

ஆயரின் முக்கிய பணிகளில் நற்செய்தியைப் போதித்தல் முதலிடம் பெறுவதுடன் (திருச்சபை எண் 25) கண்காணிப்பாளன் என்ற ரீதியில் இவர் மேல் சுமத்தப்பட்ட பாரிய கடமையாகவும் இருக்கிறது என்பதைச் சின்னப்பரின் கூற்றாகிய "நற்செய்தியை அறிவிப்பது கூட நான் பெருமைப்படுவதற்குரியதன்று. இது என் மேல் சுமத்தப்பட்ட கடமையே...... கண்காணிப்பாளன் என என்னிடம் ஒப்படைக்கப்பட்ட அலுவலையே செய்கின்றேன்' (1 கொரிந்தி 9: 16–17) என்ற வார்த்தைகள் தெளிவாக்குகின்றன. "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள்'' (மாற் 16: 15) என்ற இயேசுக் கிறிஸ்துவின் வார்த்தைகளைச் சிரமேற் கொண்டு எத்திசைக்கும் நற்செய்தியினை முழங்கிய அப்போஸ்தலர்களின் வழித் தொடரல்களாகிய ஆயர்கள் தம் போதகப் பணியால் இறையரசைப் பற்றிய செய்திகளையும், படைத்தவரின் வல்லமைச் செயல்களையும், மீட்பின் வெளிப்பாடுகளையும் பறைசாற்றுகின்றனர். தம் மறையுடலாகிய திருச்சபை ஒன்றிணைந்து வாழவும், நிறை உண்மைகளை நோக்கிப் பயணம் செய்யவும் வழிகாட்டுகின்றனர். ஆவியின் வல்லமையால் வழுவா வரம் கொண்ட ஆயர்கள் உறுதியுடனும் மாறுபடாத் தன்மையுடனும், அதிகாரத்துடனும் தம் போதகப் பணியை ஆற்றுகின்றனர். இறைமக்களை விசுவாசத்திலும் ஒழுக்கத்தைச் சார்ந்த கோட்பாடுகளிலும் ஆழம் பெறச் செய்து விண்ணரசு நோக்கி நடத்திச் செல்கின்றனர்.

ஆயரின் புனிதப்படுத்தும் பணியானது கிறிஸ்துவின் உடலும் இரத்தமுமாகிய நற்கருணையை வைத்தே செயல்படுத்தப்படுகின்றது (திருச்சபை எண். 26) ஏனென்றால் கிறிஸ்து தம் உடலையும் இரத்தத்தையும் மனுக்குலத்தின் மீட்புக்காகக் கையளித்து அதனைப் புனிதப்படுத்தினார். கிறிஸ்துவைத் தலைமைக் குருவாகக் கொண்ட ஆயர்கள் நற்கருணை வழிபாடுகளூடாகவும், அருட்சாதனங்களூடாகவும் இறைமக்களைப் புனிதப்படுத்துகின்றனர். இயேசுவால் மீட்பும், புனிதமும் அடைந்த மனுக்குலம் என்றும்'' பரிசுத்தரும், மாசற்றவருமாய் இருக்க வேண்டும் (எபே. 1: 4) என்ற இறைவனின் விருப்பத்தை தாமும் ஓர் நற்கருணையாக மாறி நிறைவேற்றுகின்றனர்.

ஆயர்கள் மக்களுக்காக மன்றாடுவதாலும், உழைப்பதாலும் கிறிஸ்துவினது புனிதத் தன்மையிலிருந்து ஏராளமான வரங்களை வாரி வழங்குகின்றனர். (எபி. 5: 7) பல்வேறு தீமைகளாலும், பலவீனங்களாலும் காலத்துக்கு காலம் சீர்குலைக்கப்படும் மனுக்குலத்தின் மட்டில் கூடிய விழிப்புக்கொண்டு, மனமாற்றத்துக்கு அழைப்பதில் ஆயர்கள் கண்ணும் கருத்தும் தொலைநோக்கும் உள்ளவர்களாக இருந்து செயல்படுகின்றனர்.

கிறிஸ்துவின் பிரதிநிதிகளாகவும், தூதுவர்களாகவும் இருக்கும் ஆயர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட இறைமக்களைத் தம் அறிவுரைகளாலும் முன்மாதிரிகையாலும் ஊக்குவிக்கும் சொற்களாலும் தங்களது செல்வாக்காலும், திரு அதிகாரத்தாலும் ஆண்டுநடத்தும் பொறுப்புள்ளவர்கள் - (திருச். எண் 27) அதேவேளை "தாமே வலுவின்மைக்கு ஆளாயிருப்பதால், அறியாமையால் நெறி தவறிச் செல்வோரை பொறுமையோடு நடத்தக் கூடியவராய் இருக்கின்றார்'' (எபிரே 5: 2) என்பதற்கேற்ப வலுவற்ற பலவீனமுள்ள அறியாமை இருளில் மூழ்கியுள்ள மந்தைகள் மேல் பரிவிரக்கமும், அளவுகடந்த அக்கறையும் கொண்டு, அவற்றைப் பேணிக்காக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இன்னும் "உங்களுள் பெரியவன் சிறியவன் போலவும், தலைவன் பணிவிடை பெறுபவன் போலும் இருக்கட்டும்'' (லூக் 22: 26) என்பதற்கேற்ப கிறிஸ்துவின் முன்மாதிரிகளைக் கண்முன் கொண்டு மிக்க தாழ்மையோடு ஊழியம் செய்ய வேண்டியவர்களாகவும் இருக்கின்றனர். "நல்ல ஆயன் தன் ஆடுகளுக்காக உயிரையே கொடுப்பான்'' (அரு. 10:11) என்பதற்கேற்ப தன்னலமற்ற தியாக வாழ்வால் தொலைந்ததைத் தேடிக் கண்டுபிடித்து மந்தைகளோடு சேர்க்கிறார். உலக தீமைகளிலிருந்து காப்பாற்றி உயர்ந்த மேலான ஆயனாகிய கிறிஸ்துவிடம் மக்கள் அனைவரையும் அழைத்து வரும் பாரிய பொறுப்புள்ள நல்ல மேய்ப்பாளனாகத் திகழ்கின்றார்.

ஆயர்கள் தம் முப்பணிகளூடாக இறை தந்தையின் "விண்ணிலுள்ளவை மண்ணிலுள்ளவை அனைத்தையும் கிறிஸ்துவுக்குள் ஒன்று சேர்க்கும்'' (எபே 1:10) திட்டத்தை நிறைவேற்றுபவர்களாகவும், கிறிஸ்துவின் மறையுடலாகிய திருச்சபையைக் கட்டியெழுப்பும் உயிருள்ள கற்களாகவும் விளங்குகின்றனர்.

வாழ்க ஆயர்!
வளர்க அவர் பணி!
வாழிய இறை புகழ்.

# நோக்கும் போக்கும்

● சகோ. இ. அந்தோனிதாஸ் டலிமா

திருச்சபையானது பயணம் செய்கின்ற திருச்சபை. ஆகவே அதன் பயணம் முடியாது, பாதையைவிட்டு விலகாது. திருச்சபையின் நோக்கும்போக்கும் சந்தர்ப்பவாதங்களாலோ, சதிகளாலோ, காலத்தின் மாறுதல்களாலோ கரைபட்டு விடாது; அடித்துச் செல்லப் பட்டுவிடாது. இதற்குச் சான்றாக இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் இடம் பெற்ற மறைவட்ட ஆயர் நியமனங்கள் அமைகின்றன. புதிய ஆயர் பதவி யாருக்கு வழங்கப்படும், அந்த அதிகாரத்தை எட்டிப் பிடிப்பவர்கள் யார் என்ற அவசியமற்ற எதிர்பார்ப்புக்களோடு இருந்த வேளையிலே அவற்றையெல்லாம் உடைத்தெறிந்தாற்போல தூய ஆவியின் ஏவுதலினால் பணிவாழ்வுப் பொறுப்பு கைமாற்றப்படுகின்றது. புதிய ஆயரின் விருதுவாக்கும் ஆயர் பணிவாழ்வுக்குத் தான் அழைக்கப்படுகிறாரேயொழிய பதவி வாழ்வுக்காக அல்ல என்பதையும் எடுத்துக்காட்டுகின்றது.

கடவுள் தம் இரத்தத்தினால் சொந்தமாக்கிக்கொண்ட திருச்சபை என்னும் மந்தையை மேய்ப்பதற்காக பரிசுத்த ஆவியானவர் சிலரை மேற்பார்வையாளராக ஏற்படுத்துகின்றார். இந்தவகையிலே மன்னார் மறைமண்ணுக்கும் புதிய மேய்பன் ஒருவர் ஏற்படுத்தப்பட்டுள்ளார். விசுவாசிகளின் இரத்தத்தினால் வளமூட்டப்பட்ட மன்னார் மறைவட்டம் தனது பதினொராவது வயதிலே ஒரு மேய்ப்பரின் இடத்துக்கு வேறொரு மேய்ப்பரைப் பெறுகின்றது.

மன்னார் இறை மந்தையைப் பராமரிப்பதற்கு ஆவியினால் அழைக்கப்பட்ட பேரருட் பெருந்தகை இராயப்பு ஞானானந்தர் யோசவ் ஆண்டகை அவர்கள் தன்னை அர்ப்பணித்து வருகின்றார். ஆழ்ந்து தியானித்து சிந்தித்து, செபித்து ஆவியின் ஏவுதலால் உந்தப்பட்டவராக தனது பணி நோக்கின் நிதர்சனப் போக்காக–வாக்காக "மிக்க தாழ்மையுடன் ஊழியஞ் செய்ய'' என்னும் விருது வாக்கைத் தெரிந்துள்ளார். என்னால் இறைமக்கள் கூட்டத்திற்குப் புறம்பே நிற்கமுடியாது. நான் ஒரு மக்களின் பணியாளனே என்பதை ஆயரின் வாக்குகள் கோடிட்டுக் காட்டுகின்றன. "ஒவ்வொரு மரத்தையும் அறிவது அதனதன் கனியாலே'' என்றார் இயேசு. ஆம், புதிய ஆயரின் தாழ்ந்த உள்ளம், அமைதியாக அன்போடு பணிபுரியும் பக்குவம் எல்லாமே அவர் ஒரு நல்ல இறைபணியாளன் என்பதை எல்லோருக்கும் உணர்த்துகின்றது.

"ஆண்டவரே பேசும்: உம் அடியான் கேட்கின்றான்'' (1 சாமு 3.10) என்று ஆண்டவரின் அழைப்புக்கு அமைதியாகப் பதிலளித்து வந்தார் சாமுவேல். 'ஆண்டவரே இதோ அடியேன்'' என்று முன் வந்தார் அனனியா (அப். 9:10) ஆண்டவரின் குரலைப் புரிந்து கொண்டவர்கள், தெரிந்து கொண்டவர்கள் தங்களையே தாழ்த்திபணி செய்யவந்துள்ளமையை நாம் விவிலியத்தினூடாகக் காண்கின்றோம். தங்களுக்கேயுரித்தான சிறப்புப் பண்புகளோடும், ஆற்றல்களோடும் சிதறிய மந்தைகளைச் சீராக்க, இறைவன் பால் அழைத்துச்செல்ல முன்வரும் இவர்களெல்லாம் உண்மையிலேயே இறை மனிதர்கள்தான். மண்ணிலே விண்ணை அமைப்பவர்கள்தான்.

சந்தர்ப்பவாத சவால்கள், சூழ்ச்சிகள் இன்னல்கள் மத்தியில் பணியாற்றிய சின்னப்பர் எடுத்தாண்ட மொழிகளை அதேபோன்ற சிக்கல்கள் நிறைந்த கால கட்டத்திலே பணிபுரிய விருக்கின்ற ஆயர் அவர்கள் தனது விருது வாக்காகக் கொண்டுள்ளமை பொருத்த முடையதாகும். கடவுளுடைய அருளைப்பற்றிய நற்செய்திக்குச் சான்று பகருமாறு ஆண்டவராகிய இயேசு தன்னிடம் ஒப்படைத்த பணியை நிறைவேற்றி தன் வாழ்க்கைப் பயணத்தை தொடருவதே தன் பணி என்ற போக்கு ஆயரின் விருதுவாக்கில் மிளிர்வதை நம்மால் புரிந்து கொள்ள முடிகின்றது. புதிய ஆயரின் விருது மொழியிலே ஆழ்ந்து கிடக்கும் அர்த்தங்கள் அதிகம். "தம்மையே வெறுமையாக்கி அடிமையின் பூண்டு...தம்மைத் தாழ்த்திச் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவிற்குக் கீழ்ப்படிபவரானார் (பிலி. 2:7–8)'' என்ற யேசுவின் போக்கு ஆண்டகையின் வாக்கில் இழையோடியிருப்பது சிறப்பம்சமாகும். இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு பணிவாழ்வு என்பதை மிகத் துல்லியமாக விருது வாக்கு எடுத்தியம்புகின்றது.

## நற்பண்புகள்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடக்கமாகவும் தமது கடமையைச் செய்வதிலேயே என்றும் கண்ணும் கருத்துமாய் இருப்பவர். "தாழ்ச்சியுடன் பணிபுரிய'' எனும் இவரது விருது வாக்கு இதற்குச் சிறந்த சான்றாகும். அனைத்திற்கும் மேலாக இவர் ஏழை எளியவர் மீது இரங்கும் பரிவுள்ளம் கொண்டவர்; இரப்போர்க்கு இல்லையெனாது வாரி வழங்கும் வள்ளல். இவரது ஈகையால் பயனடைந்த எண்ணற்ற ஏழை மக்கள் இதற்கு நிலையான சாட்சிகளாய்த் திகழ்கின்றனர்.

## பணியினால் புகழ் பெற்ற....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

மெழுகு வர்த்தியாகவும், ஆற்றலில் மின்விளக்காகவும், ஆளுமையில் உந்துசக்தியாகவும் பணியினால் குன்றிலிட்ட தீபமாகவும் திகழ்ந்துள்ளார்.

பணிகள் பலவிதம் அவற்றில் முதன்மையும், நிறைவும் அளிக்கும் பணி இறைபணியாகும். இதில் இறையன்பும், பிறரன்பும் இணைந்து செயல்படுவதையே இறைவன் விரும்புகின்றார். இதையே தாயுமானவரும்

"அன்பர் பணி செய்யஎன்னை
ஆளாக்கி விட்டு விட்டால்
இன்ப நிலை தானே
வந்தெய்தும் பராபரமே''

என்று குறிப்பிடுகிறார்.

இறைவனே கதியெனக் கடினமாக உழைத்துவரும் இப்பெருமகனாருக்கு காணிக்கையாக "எம்மிடம் பொன்னும் வெள்ளியுமில்லை, ஆண்டவரின் அருளை வாரி வழங்குகிறேன்'' (அப். பணி 3 : 6) என்ற உரைக்கேற்ப யாழ். சுண்டிக்குளி பங்கு மக்கள் அனைவரும் கரம்கூப்பி, சிரம் தாழ்த்தி இறைவனை இறைஞ்சுவதோடு புதிய ஆயரின் பணி சிறப்புற்றுத் திகழ உளமார வாழ்த்துகிறோம்.

★ ★ ★

# மறைத்தூதர் வழியில் நமக்கொரு ஆயர்

● சகோ. அ. சகாயநாதன்.

''விசுவாசிகளை மேற்பார்வையிடும் அலுவலை ஏற்க விழைபவன் ஒரு மேன்மையான தொழிலையே விரும்புகிறான். என்பது உண்மையான வார்த்தை'' எனச் சான்று பகரும்சின்னப்பர் ஆயருக்குரிய தகுதி, கடமை, உரிமைகளையும் தம் திருமுகங்களில் ஆங்காங்கே குறிப்பிடுகிறார். (1 திமோ 3/1-7, தீத்து 1/7-9) ஏனெனில் ''இறைவனின் ஏற்பாட்டின்படி ஆயர்களுக்கு அளிக்கப்படும் பரிசுத்தஆவியால், அவர்கள் அப்போஸ்தலர்களின் வழிவந்தவர்கள் ஆகிறார்கள். விசுவாசக் கொள்கையைப் போதிப்பவர்கள், திருவழிபாட்டில் குருக்கள், ஆட்சி புரியும் பணியாளர்கள் என்றவாறு இவர்கள் திருச்சபையின் மேய்ப்பர்களாக ஆக்கப்படுகிறார்கள். (திருச்சபைத் சட்டத் தொகுப்பு எண் 375)

ஒருவரை ஆயராகத் தேர்ந்தெடுக்க அவருக்கு சில தகுதிகள் இருக்கவேண்டும் என கற்பிக்கிறது (எண் 378). அவர் உறுதியான விசுவாசத்திலும், நல்லொழுக்கத்திலும் சிறந்து, ஞானமும், விவேகமும் மனித மாண்பும் உடையவராக இருத்தல் வேண்டும். இன்றும், தமது உயர்ந்த பணியை நிறைவேற்றத் தேவையான ஞான வரங்களைப் பெற்றவராகவும், மக்களின் மதிப்புக்கு உரியவராகவும் திகழ வேண்டும்.

யாழ். மறைவட்டத்திலிருந்து பிரிந்து தனி மறைவட்டமாக உருவாகி வளர்ந்து வருகையில் மன்னார் மறைவட்டத்திற்கு இரண்டாவது ஆயராக உயர்த்தப்பெறும் பேரருள்திரு. இராயப்பு யோசப் அடிகளார் மேற் சொன்ன தகுதிகளைப் பெற்றவர் என்பது உண்மை.

கடந்த பல மாதங்களாக புதிய ஆயர் தேர்வு பற்றிப் பேசப்படும் போதெல்லாம் பேரருட்திரு. யோசப் அடிகளாரின் பெயரும் அடிபடும். அவரை அறிந்தவர்களின் நெடுங்கால எதிர்பார்ப்பு இன்று நிறைவுறுவதில் யாவரும் மகிழ்ச்சியடைகின்றனர். அவரது ஆன்ம வளமும், மனிதப் பண்புகளும், யாழ் மறைவட்டத்திற்கு ஆற்றிய பணிகளும் நேர்மையுடன் நோக்குவோருக்கு மாண்புடையனவாய்த் தோன்றும் என்பதில் ஐயமில்லை. நாடிவருவோருக்கு நன்மைபுரியக் காத்து இருப்பதைத் தம் குறிக்கோளாகக் கொண்ட இவரது தனிப்பண்பு இனிமை எனலாம். இன்முகம் காட்டி புன்னகை பூக்க இன்னா செய்தோர்க்கும் இனியவே செய்யும் நல்ல குணத்தவர் இவர். இவரது பணியை எதிர்த்துப் பேசியோரையும், புண்படுத்தியவர்கள் மீதும் கோபம் கொள்ளாமல் மன்னித்து மறக்கும் மனப்பான்மையும், எதிர்த்தவர்களைக் காணுமிடத்தில் எதுவும் நடவாது போல் இனிதாகப் பழகும் இவரை இரக்கத்தின் ஆண்டவராம் யேசுவின் உண்மைச் சீடரென வெள்ளிடை மலைபோல் தெள்ளெனக் காட்டும்.

கனியினின்று மரத்தைக் கணித்தறிக என்றார், எம் பெருமான் யேசு. ஆயர் அவர்கள் ஈந்த நற்கனிகளை ருசித்தவரே அறிவார். இத்தகைய கனிதனைத் தரும் நன்மரம் எத்தகையது என்று சொல்லாமலே விளங்கும். இவர் இறைப் பற்று எனும் ஆணிவேரில் ஊன்றி நிற்பவர். இறைவனின் துணைக்கரம் என்றும் நமக்குண்டு என்னும் சொற்றொடர் அவரது சொற்பொழிவுகளில் அடிக்கடி இடம்பெறும். இறையருளின் பராமரிப்பில் ஆழ்ந்த உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார். தம் மனிதப் பண்புகளை இறையருளால் வளப்படுத்தி வளர்ச்சியும், முதிர்ச்சியும் அடைய இடையறாது முயற்சி எடுத்து வருபவர். அவர் பல்வேறு துறைகளில் பெற்ற வெற்றிகளுக்கும் இன்று அன்னார் பெறும் ஆயர் பதவிக்கும் ஒரே காரணம் இறைவனின் கருணையேஎன்ற உறுதியில் நிலைத்திருப்பவர்.

ஆகவே இந்நாளில் நாமும் புதிய ஆண்டகையோடு இறைவனைப் போற்றுகிறோம். அவர் வழியாக புனித சவேரியார் குருத்துவக் கல்லூரிக்கு, மறையாசிரியர்களுக்கு, அவர் பணி புரிந்த பங்குகளுக்கு விளைந்த நலன்களுக்காக பர அடிபணிந்துநன்றி கூறுவோம். அவர் பொறுப்பேற்கவிருக்கின்ற மன்னார் மறைமாவட்டத்தில் ஆயர் தம் புதுப்பணியில் சிறப்புற்று வெற்றி பல ஈட்டிட இறைவனை இறைஞ்சுவோம்.



பரிசுத்த தந்தை 2ஆம் அருள் சின்னப்பரின் நல்வாழ்த்துக்களும் ஆசீரும்

# கல்வியில் கலாநிதியாய் குருத்துவக் கல்லூரியில் குன்றாவிளக்காய்....

● புனித சவேரியார் குடும்பம்

நெடுந்தீவு மண் எங்களிடமிருந்து தொடர்புகள் முற்றும் துண்டிக்கப்பட்டுள்ள நிலையில் இன்று தனித்த பூமியாக உள்ளது. அங்கு அரும்பணியாற்றிக் கொண்டிருக்கும் அருட்தந்தை அன்ரனிதாசன் அடிகளாரோடோ அன்றேல் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களோடோ எங்களது நேரடி தொடர்புகள் இன்று அறுந்துள்ள போதிலும், யாழ்-மன்னார் பகுதிகளில் வாழும் அனைத்து இறைமக்களின் உள்ளங்களிலும், உதடுகளிலும் தவழ்ந்து கொண்டிருக்கின்ற புண்ணிய பூமியாக அது இன்று மாறிவிட்டது. அம் மண்ணின் மைந்தன் அருட்தந்தை இராயப்பு யோசவ் அடிகளார் மன்னார் மறைவட்டத்தின் ஆயராகத் திருநிலைப்படுத்தப்படும் இனிய நிகழ்வின் மகிழ்வு எம் ஒவ்வோருவரினதும் நெஞ்சங்களையும் நிறைத்துக் கொண்டிருக்கின்றது.

இறை அழைத்தலில் வளர்ந்து குருவாகிய இவர் அறிவாற்றலில் சிறந்தோங்கினார். மேய்ப்புப்பணியில் அப்போஸ்தலிக்க ஆர்வமும், வாஞ்சையும் கொண்டவராக இவர் இருந்த போதிலும் கல்வியிலும் குன்றாது கலாநிதியாய் கல்விமானாய் உயர்ந்து வளர்ந்து நிற்பது இங்கு குறிப்பிடத்தக்கது. 1980 முதல் 1984வரை உரோமை நகரில் உள்ள பாப்பிறையின் ஊர்பாணியா பல்கலைக்கழகத்தில் கல்விபயின்று திருச்சபையின் சட்டக்கோவையில் கலாநிதிப் பட்டம் பெற்று உயர்ந்தார். 1982 தொடக்கம் 1983 வரை உரோமை நகரிலுள்ள பாப்பிறையின் கிரகோரியார் பல்கலைக்கழகத்தில் லத்தீன் மொழியில் உயர்பட்டம் பெற்றுத் தேறினார். தொடர்ந்தும் அங்கு 1983இல் இருந்து 1984 வரை கல்விபயின்று திருச்சபையின் சட்டக்கோவை தழுவிய நீதித்துறையில் நிபுணத்துவம் பெற்றார்.

யான் பெற்ற அறிவைப் பெறுக இவ்வையகம் என்ற உயர் நோக்கோடு நாடு திரும்பிய இவர் யாழ் மறைவட்டத்தின் இதயமாக விளங்கும் கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக்கல்லூரியில் 1985 தொடக்கம் விரிவுரையாளராகத் தம்மை இணைத்துக் கொண்டார். 1992ஆம் ஆண்டு வரை இங்கு திருச்சபை சட்டக்கோவை, திருமுழுக்கும் உறுதிபூசுதலும், திருச்சபையின் நீதி பரிபாலனத்துறை, மேய்ப்புப் பணியில் அருட்சாதனங்கள் போன்ற பாடங்களை எங்களுக்குப் புகட்டி அரும்பணியாற்றியுள்ளார். பங்குத்தளத்தில் பணி புரிந்துகொண்டிருக்கும் நிலையில் எமக்குக் கல்வி புகட்ட வந்த அருட்தந்தை தனியே எமக்கு அறிவியல் ரீதியான கல்வியைப் புகட்டுவதோடு மட்டும் திருப்திப்படாது அனுபவ ரீதியான வாழ்வு நிலைகட்கு ஏற்றால் போல் மேய்ப்புப்பணியோடு கூடிய அறிவை எமக்கு அளிப்பதிலும் அவர் ஆற்றிய பணி வியந்து குறிப்பிடத்தக்கது. நாம் கற்கும் கல்வி பரீட்சையில் சித்தி எய்துவதோடு மட்டும் நின்றுவிடாது பணி வாழ்வுக்கு எம்மை பக்குவப்படுத்தும் படிகளாக அமைய வேண்டுமென்பது எங்கள் அருட்குரவரின் இதய ஆதங்கமாகும்.

விரிவுரைகட்கு நேரம் தவறாது சமூகம் கொடுப்பதும் பாடத்திட்டத்தை ஒழுங்கு நிரைப்படுத்தி மாணவர்கள் கிரகித்துக் கொள்ளும் முறையில் அதை எளிமையாக்கி வழங்கிடும் தேர்ச்சி பெற்றவர் எம் புதிய ஆயர். இவரிடமிருந்து அறிவைப் பெற்றவர்களில், எமது குருத்துவக்கல்லூரியிலிருந்து குருக்களாகி பணித்தளத்திலுள்ள 39 பேரும், குரு மாணவர்களான 23 பேரும் இவரது மேய்ப்புப்பணியோடு கூடிய கல்வி புகட்டலின் பயன்பாட்டை அனுபவித்து அதை மக்களுக்கு வழங்குவார்கள் என்பதில் ஐயமில்லை.

எங்கள் ஆசானின் உயர்வில் நாம் அக்களிக்கின்றோம்; இதயம் நிறைந்து இனிய வாழ்த்துக்கள் கூறுகின்றோம். சவேரியார் குருத்துவக் குடும்பத்தின் அதிபர், ஆசிரியர், மாணவர் அனைவரும் ஒன்றித்து ஆயரான உங்களுக்கு இறையாசீர் வேண்டி அன்போடு வாழ்த்துகின்றோம்.

உங்களை தனது இரண்டாவது புதிய ஆயராக பெறுகின்ற மன்னார் மறைவட்டம் இறையன்பிலும் அருளிலும் செழித்து வளர்தோங்கிடுக! நும் பணி வளர்ந்திடுக!!

# "மக்கள் அவரை யார் என்று சொல்கிறார்கள்?" எனக் கேட்டார்

● அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை

★ ''எங்கட சுவாமியைப் பற்றி மிகவும் சுருக்கமா சொல்வதானா அவர் எப்போதும் தாழ்ச்சியுடன் தான் ஊழியம் செய்தார். அதையே தன்னுடைய விருதுவாக்காகவும் தெரிந்திருக்கிறார்.''

★ ''எமது புனித ஆசீர்வாதப்பர் கோவிலை தமிழ் பண்பாட்டுக் கலாசார முறைகளைப் பிரதிபலித்து புதுப்பொலிவுடன் கட்டி எழுப்பிய பெருமை இவரையே சாரும். இவர் ஓர் கட்டிடக் கலைத்துறைக் கலைஞன். எமது ஆலய வரலாற்றில் இவர் பங்குத்தந்தையாக இருந்த காலம் ஒரு பொற்காலமாகும்.''

★ ''சிரிக்கவே மாட்டார். ஆனால் சிரிக்கும்போது ஒரு தனி அழகு மிளிரும். ஒருக்கா சிரியுங்கோ பாதர் என்றால் தலையைக் கவுண்டு கொண்டே போயிடுவார். நிறைவைக் கண்டால் புன்னகை புரிவார். ஐயா அது வொரு பொன்னகை.''

★ ஏழைகள் மட்டில் மிகுந்த கரிசனையுடையவர். குறிப்பாக நாட்டுப் பிரச்சனையால் இடம்பெயர்ந்த மக்கள், ஏழைகள், வருத்தப்பட்டவர்கள், அநாதைகள், யாருமற்றோர் மீது மிகுந்த கரிசனை காட்டுவார்.

★ உதவிகள் தேவைப்படுவோருக்கு மட்டும் நேரடியாகக் கிடைக்க வேண்டும் என்பதில் அதிக கவனம் செலுத்துவார். உதவி கேட்டு வரும் எல்லோரும் பணம் பெற்றுப் போவதில்லை. உள்ளே வந்திருந்து டாண் சாப்பிட்டுப் போனதுமுண்டு. பின்பு அவர்கள் வீடு தேடி நிலமை அறிந்து தேவையென்றால் மட்டும் உதவி செய்வார் என்றார்.

★ படிக்கக் கூடியவர்களாயிருந்தும் படிக்க வசதியற்ற எத்தனையோ பேருடைய கல்வி அறிவிற்காய் அவர் அதிகம் உதவி செய்திருக்கிறார்.

★ மக்களைச் செபிக்கப் பழக்கி பங்கில் செபக்குழுக்களை உருவாக்கி, தேவதாய் தனி செபத்தில் ஆர்வமுடையவள்.

நாமும் தனிச் செபம் செய்யவேண்டும், என்று உற்சாக மூட்டுவார். உயிருள்ள ஆட்களை அன்பு செய் என்று அடிக்கடி கூறுவார். கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டிப்பும், மதிப்பளிக்க வேண்டிய இடத்தில் மதிப்பும் கொடுக்கத் தவற மாட்டார்.

# சமகால எதிர்பார்ப்புகள்

தொகுப்பு:- ஸ்ரனி அன்ரனி ( அ. ம. தி. )

## பொதுநிலையினரின் எண்ணத் துளிகள்

மன்னார் மறைவட்டத்தின் சமகால எதிர்பார்ப்புக்கள் பற்றிபொதுநிலையினர் சிலரை அணுகி செவ்வி கண்டபோது அவர்கள் வழங்கிய எண்ணத் துளிகளை இங்கு தொகுத்து தருகின்றோம்.

★ பொதுநிலையினரின் உருவாக்கத்தில் அக்கறை காட்டப்படுதல் இன்றைய தவிர்க்க முடியாத தேவையாகின்றது. நற்செய்தி அறிவிக்கும் பணியில் குருக்கள் துறவிகளோடு இணைந்து செயற்பட பொதுநிலையினரை பயிற்றுவித்தல் அவசியமாகும். முதியோருக்கான மறைவாழ்வுக் கல்வி ஊட்டப்படுதல் வரவேற்கத்தக்கது.

★ சமூக, அரசியல், பொருளாதாரப் பணிகளில் முழு மனித விடுதலையை அடிப்படையாகக் கொண்டு செயற்பட திட்டங்கள் வகுக்கப்படடல் வேண்டும். குறிப்பாக இரண்டாம் ஈழப்போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வும், நிவாரணமும் வழங்கும் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுதல் அவசியமாகும். இனமத வேறுபாடின்றி தலத் திருச்சபை நீதியையும், சமத்துவத்தையும் நிலைநாட்ட உழைக்க முன்வரவேண்டும்.

★ மன்னார் மறைமாவட்டம் கல்வியில் பின்தங்கி நிற்பதால் கல்விவளர்ச்சியில் அக்கறை செலுத்துதல் வேண்டும். கத்தோலிக்க ஆசிரியர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, கிராமப்புறங்களில் குறைந்தவசதியுள்ள மாணவர்களுக்கு கல்வி கற்க வசதி செய்து கொடுத்தல் முக்கியமானது.

★ விரக்தியடைந்த நிலையில் வாழும் இளைஞர்களுக்கு விழிப்புணர்வு பாசறைகள் மூலம் சமயப்பற்றையும் வாழ்க்கையில் நம்பிக்கையையும் ஏற்படுத்துதல். சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி இளைஞரை அவற்றில் ஈடுபடுத்துதல். பங்குத்தளங்களில் இளைஞர்களுக்கு பங்கின் செயற்பாடுகளில் முன்னுரிமை அளித்தல்.

★ மன்னார் மறைவட்டத்தில் வாழும் கத்தோலிக்க மக்களின் விசுவாச வாழ்வை புதுப்பித்தல் (Faith Renewal) இன்றியமையாதது. வழிபாட்டிற்கும் வாழ்விற்குமிடையேயுள்ள இடைவெளியை நிரப்புதல் அவசியம். அடிப்படை கிறிஸ்தவ குழுக்களின் சவாலை எதிர்கொள்ள வேதாகமத்தின் மட்டில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல். கத்தோலிக்க பாரம்பரியத்தில் ஊறிய சில பக்திமுயற்சிகளை தொடர்ந்தும் பேணி, சூழ்நிலை மாறுபாட்டிற்கேற்ப புதுப்பித்தல்.

★ குருக்கள் – இறைமக்கள் தொடர்பு மறைவளர்ச்சிக்கும் இறைமக்களின் விசுவாச வளர்ச்சிக்கும் தூண்டுகோலாக அமையும். பங்குத்தளங்களில் குருக்கள் நீதியாக, பாரபட்சமின்றி பணிசெய்தல் வரவேற்கத்தக்கது. மறக்கப்பட்ட இறைமக்களை தேடி மந்தையில் மீண்டும் சேர்க்கும் பணிக்கு குருக்கள் பங்குத்தளங்களில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

---

அனைவரின் ஒத்துழைப்பும் வேண்டப்படுகிறது.

### ஏகோபித்த எதிர்பார்ப்புக்கள்

ஒரு அரசை ஆளுவதைவிட ஒரு மறைமாவட்டத்தை நிர்வகிப்பது பொறுப்பு வாய்ந்த ஒன்று. சிறந்த தலைமைத்துவப் பண்பு, பொறுப்புணர்வு, தீர்க்க தரிசனப்பார்வை, அறிவு என்பவற்றோடு இறைமக்களின் ஆன்மநலன், மறைபரப்புபணிமீதான ஆர்வம் என்பன அவசியம் இருக்க வேண்டிய பண்புகள்.

மக்களின் விசுவாச வாழ்வைக் கட்டியெழுப்பி நம்பிக்கை இழந்தவர்களுக்கு வாழ்வின் அர்த்தத்தை புரியவைக்க வேண்டும். கத்தோலிக்க வேத விசுவாசத்திற்கு அச்சுறுத்தலாக இருக்கும் அடிப்படைவாதக் கிறிஸ்தவப் பிரசாரகர்களுக்கு எதிராகப் போராட வேண்டும். உலகத் திருச்சபையில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு ஆயரும் இன, மத, மொழி வேறுபாடுகளுக்கப்பால் சிந்திக்கவும், செயலாற்றவும் அழைக்கப்படுகின்றனர். பிளவுபட்டிருக்கும் தமிழ்–சிங்கள இன உறவை கட்டியெழுப்ப இத்தமிழ் ஆயர்கள் முயற்சி செய்ய வேண்டும். தொடரும் யுத்த சூழ்நிலை முடிவு பெற்று தமிழ் மக்கள் நிம்மதியாக, சுதந்திரமாக வாழ இவர்களின் பணி இன்றியமையாதது.

மிகவும் சிக்கல் நிறைந்த புதியதொரு வரலாறு உருவாகிக் கொண்டிருக்கும் இக்காலத்தில் இப்புதிய ஆயர்கள் தம் பணிக்களங்களில் காலடி பதிக்கின்றனர். பரிசுத்த ஆவியின் துணையுடன் சவால்கள் அனைத்தையும் சமாளிப்பார்களாக! ஈழத்து கத்தோலிக்க திருச்சபையை திறம்பட நிர்வகித்து கடவுளுக்கு உகந்த இறைமக்களையும், சமாதானம் நிறைந்த தமிழ் சமூகத்தையும் கட்டியெழுப்புவார்களாக!

# ஈழத்துக் கத்தோலிக்க....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலை, நானாட்டன், செட்டிகுளம் ஆகிய பங்குகள் மூடப்பட்டன. இப்படியான சூழ்நிலையிலும், ஆயர் தன்னுடைய பணியை சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப சிறப்பாக செய்து முடித்தார். அன்புள்ளமும் அதேவேளை கண்டிப்பும். ஒருங்கே இணையப்பெற்ற ஆயர் அவர்கள் மக்களை கவரும் வகையில் தனது மறைப் பணிகளை ஆற்றும் திறமை பெற்றிருந்தார். இவ்வாறு அவர் மன்னார் மக்களின் மனங்களில் நிறைந்திருக்கின்றார்.

### புதிய ஆயர்களை எதிர்நோக்கும் சவால்கள்

யாழ். ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை அவர்கள் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, யாழ்மறைமாவட்டத்தின் புதிய ஆயராக பேரருள்திரு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். புதிய மன்னார் ஆயராக பேரருள்திரு இராயப்பு யோசப்பு அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். ஈழத்து கத்தோலிக்க திருச்சபையின் தலைமைத்துவத்தை ஏற்கின்ற இந்த இரண்டு ஆயர்களும்பலவிதமான சவால்களை சந்திக்க வேண்டி உள்ளது. இன்று தமிழ்மண்ணில் இடம் பெறும் போராட்டம், அதன் பக்க விளைவுகளான ஆகாய, கடல், தரை மார்க்கமான இராணுவ நடவடிக்கைகள், பொருளாதாரத்தடை, அகதிகள் பெருக்கம், பட்டினிச்சாவு, மருத்துவ வசதியின்மை என்பன முக்கியமான பிரச்சனைகளாக கோடிட்டுக் காட்டலாம்.

அத்தோடு மறைபரப்புப் பணிக்களத்தில் பல சவால்கள் காத்துக்கிடக்கின்றன. அடிப்படை வாதக் கிறீஸ்தவக் குழுக்களின் ஊடுருவல் கத்தோலிக்க திருச்சபைக்கு அச்சுறுத்தலாக அமைகிறது. பரந்து விரிந்து கிடக்கும் பணிக்களத்தில் பணியாற்றப் போதிய குருக்கள் இல்லை. இதனால் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மந்தைகளை சரியான முறையில் கவனிக்க முடியாத நிலை. இன்றைய யுத்தச் சூழ்நிலை பல விசுவாசிகளுக்கு மனவிரக்தியையும், குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அகதி முகாம்களில் தஞ்சம் அடைந்த மக்களின் சமய, சமூக, ஒழுக்க வாழ்வு சீரழிந்துள்ளது. ஆயுதக் கலாச்சாரத்திற்கு பழக்கப்பட்ட எதிர்கால சந்ததியொன்று உருவாகிக் கொண்டிருக்கிறது.

கால நகர்வில் ஏற்படும் இச் சவால்கள் தவிர்க்கப்பட முடியாதவை. இவற்றிற்கெல்லாம் முகம் கொடுத்து தொலை நோக்கோடு செயற்படுவது அவசியமானது. சமுகமற்ற இச்சூழ்நிலையின் சவால்களை சந்தித்து சரித்திரம் படைக்க

# 'அழுகுரல் கேட்குது அகதிமுகாமில்'
# துன்பம் துடைக்க வாரீர்!

பசும்புல் தரைகள் பார்வைக்கு அப்பால்
நீர் நிலைகளோ நெடும் தூரம் தள்ளி
துயரங்களை தூக்கி எறிந்து
நம்பிக்கையோடு நிமிர்ந்து சொல்கிறோம்
மேய்ப்பனே வாருங்கள்!
*Welcome! Welcome!*

மனிதனாகத்தான் வாழ விழைகிறோம்
அகதி என்பது பலவந்தப் பெயர் மாற்றம்
லொறியில் நெல்லும், மீனும் – கருவாடும்
ஏற்றி அனுப்பும் மக்கள் நாங்கள்
லொறியில் வந்து இறக்கும் பொருட்களை
எதிர்பார்த்து நிற்பதாய் சொல்வதைக் கேட்பது
நிலைமை செய்த நிர்ப்பந்தம்! நிர்ப்பந்தம்!
குரங்குகளெல்லாம் கிளைகளில் இருந்து — தம்
சொந்த இடமெனத் துள்ளித் திரிகையில்
அடைந்து கிடக்க ஆருக்கு ஆசை
ஆயனே எம் நிலை உணர்ந்து வாருங்கள்!

அகதிகள் படுகின்ற அல்லல்கள் ஆயிரம் – அதை
ஆதாயமாக்கின்ற கள்வர்க்கு ஆனந்தம்
ஹெலியும் பொம்மரும் உடைமையை அழித்தது
ஓடிவருகையில் பலவற்றை விட்டோம்
எடுக்க மறந்ததில் மனச்சான்றும் ஒன்றா?
எம்மை நோக்கி கேள்வி எழுப்பலாம்
அகதி முகாமைச் சுற்றி வருகையில்
ஆர்க்குமே இந்தக் கேள்வியே எழுந்திடும்
ஆலயத்தில் அன்று கிறிஸ்து எடுத்த
சவுக்கு ஏந்தவும் சந்தர்ப்பம் வரலாம்
சந்திக்க ஆயனே வாருங்கள்! வாருங்கள்!

'அழுதரல் கேட்குது அகதி முகாமில்"
கவிஞன் ஒருவன் கவலைப்படுகிறான் – இங்கோ
அடிபிடி சத்தமோ அடிக்கடி கேட்குது
வெறும் குடம் இல்லா வீட்டில் வாழ்ந்தவர்
வெறும் கிணறின் முன் விழிந்து நிற்கையில்
வடி பிடிபட்டு வழிந்து ஓடுது
ஆமி எரிக்கையில் தமிழ் நூல்களே எரிந்தன
பண்பாட்டையும் எம் பழக்கங்களையும்
அவனா வந்து எரியூட்டிச் சென்றான்?
அன்பாய் பண்பாய் வாழாதே என்று
அவனா வந்து அடித்துத் தடுத்தான்?

முகாமில் நாட்கள் நகர்வதால் – எந்தன்
வரவேற்பே முதல் முறையீடாய்ப் போயிற்றோ?
வர்ணனையோடு வரவேற்று விடலாம்
வார்த்தையும் வாழ்க்கையும் வேறாகிப் போகாதா?
குறைகள் களைந்து மறையை வளர்க்க மேய்ப்பனே
நீங்கள் வாருங்கள்! வாருங்கள்!

முருங்கன் – ஜெயா பாலாஜி
அகதி முகாம், மடுக்கோவில்

# வருகின்றார்... பணிசெய்ய

உத்தமர் இயேசுவின் மிக்க தாழ்மையை
உன்னதமாக்கி நெடுந்தீவு முத்தாய்
ஊழியம் செய இப்போ உயர்குருவாகி
உருவாக்கம் பெற்று விரைகிறார் பணிசெய்ய
ஆயகுருவாய்.

புத்தொளி வீசி புதுமணம் கமழும்
புண்ணிய பூமியாம் மன்னார் மறையில்
மந்தையாம் மக்களை போஷித்துக்காக்க
மேய்ப்பனாய் விரைகிறார் பணிசெய்ய
ஆயகுருவாய்.

குவலயம் ஈன்றிட்ட குருத்துவ விளக்காய்
குருவாம் இயேசுவின் அன்புச் சீடனாய்
குருக்கள், துறவியர், மக்கள் பணியனாய்
குன்றின் தீபமாய் விரைகிறார் பணிசெய்ய
ஆயகுருவாய்.

மறை வாழ மக்கள் மரணித்த மண்ணில்
மங்கா ஞாயிறாய் மன்னன் இயேசுவின்
மகுடம் சூடி நற்செய்தி இயம்ப
மல்கிடும் அருளால் விரைகிறார் பணிசெய்ய
ஆயகுருவாய்.

யா. யூலன் குருஸ்
பேசாலை

# நமக்கு ஒரு மகன்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜோசவ் இராயப்பு 1976ல் இறந்தார். இவரது அன்னையாகிய சவரிமுத்து அந்தோனியாப்பிள்ளைக்கு தற்போது 80 வயது. இவர்கள் 1932 டிசம்பரில் விவாகம் செய்தனர். 1940 ஜூலை 26ம் திகதி குழந்தைக்குத் திருமுழுக்கு அளிக்கப்பட்டபோது அவரது பாட்டனாரின் பெயராகிய ஜோசவ் என்பதுடன் ஞானானந்தர் என்னும் பெயரும் அவருக்கு இடப்பட்டது. அவருக்குப்பின் அவரது பெற்றோருக்கு பெண்ணும் ஆணுமாக இரு குழந்தைகள் பிறந்தன. அவர் தமது ஆரம்பக் கல்வியையும் நடுநிலைக் கல்வியின் ஒரு பகுதியையும் நெடுந்தீவு புனித சவேரியார் ரோமன் கத்தோலிக்க பாடசாலையில் பெற்றுக் கொண்டார்.

1950ல் அதிர்ஷ்டவசமாக அக் குடும்பத்தினர்க்கு மன்னார் மாவட்டம், செட்டிகுளத்தில் அமைந்துள்ள முகத்தன்குளம் குடியேற்றத்திட்டத்தின் 1ம் பிரிவில் வயல் நிலமும், மேட்டுக் காணியும் கிடைத்தன. நிலத்தைப் பண்படுத்தவும், வருவாய் தேடவும் கருதி குடும்பம் குடியேற்றத் திட்டத்தில் வசிக்கச் சென்ற போதும் சிறுவனான ஜோசவ் 1954 வரை தமது கல்வியைத் தொடர்வதற்காக நெடுந்தீவில் தங்கியிருந்தார். 1954ல் குடியேற்றத் திட்டத்திலிருந்த தமது புதிய இருப்பிடத்துக்கண்மையில் அதாவது முருங்கன் றோ. க. பாடசாலையிலும், விடுதியிலும் அவருக்கு இடம் கிடைத்தது.

## அழைப்பின் குரல்

தொலை தீவாகிய தமது சொந்த ஊரிலிருந்து வெளியேறி விட்ட இளைஞர் ஜோசவ் கல்வியில் கரிசனையும், முயற்சியும், உயர்நோக்கும் உடையவர். பல்வேறு சூழல்களிலிருந்து வந்த தோழர்களோடு பழகியதனாலும், விடுதியில் அனுசரித்த ஆன்மீகப் பயிற்சிகளின் விளைவினாலும் அவர் தமது வருங் காலத்தைப் பற்றியும், தமது வாழ்வு எந்தத் திசை நோக்கி அமைய வேண்டும் என்பது பற்றியும் சிந்திக்கலானார். தமது உள்ளார்ந்த உந்துதலையும் தமது ஆண்டவரும் நண்பருமான யேசு தமது பணிக்கு ஆழமான முழுமையான விதத்தில் அர்ப்பணிக்குமாறு விடுத்த அழைப்பையும் தனிமையில் தமக்குள் அடக்கி வைக்கவோ, உள்ளடக்கமாகக் கொண்டிருக்கவோ அல்லது போராடவோ இயலாதவராக, அவர் பிறிதொரு வழிகாட்டியின் அவசியத்தை உணரலானார்.

நத்தார் விடுமுறைக்காக அவர் செட்டிகுளத்திலுள்ள தமது வீட்டுக்கு வந்தபோது தமது பங்குக் குருவாயிருந்த பிதா பிலிப் பொன்னையா அவர்களின் துணையை நாடினார். அவரில் குருத்துவ அழைத்தல் இருப்பதை உணர்ந்த அக் குருவானவர் தாமே டிசம்பர் 27ம் திகதி அவரை யாழ். ஆயர் எமிலியானுஸ்பிள்ளை அவர்களிடம் அழைத்துச் சென்றார். அவரை உடனே ஏற்றுக் கொண்ட ஆயர், "நேற்று நான் இருவரை திருப்பி அனுப்ப வேண்டியிருந்தது. ஆனால் இந்த பையனைப் பார்த்தால் நல்ல எதிர்காலம் உள்ளது போல் தோன்றுகிறது" எனக் குறிப்பிட்டார். ஒரு வாரத்தின் பின்னர் 1955 ஜனவரி 4ம் திகதி ஜோசவ் புனித மாட்டீனார் சிறிய குருமடத்தில் சேர்ந்து, பிதா T. A. J. மதுரநாயகம் அவர்களால் உருவாக்கப்படலானார். புனித பத்திரிசியார் கல்லூரியில் தமது கல்வியைத் தொடர்ந்தார்.

உயர்நிலைக் கல்வி நிறைவு பெற்றதும் 1960ல் அம்பிட்டியா தேசிய குருமடத்துக்கு அனுப்பப்பட்டார். அங்கு தமது மெய்யியல் கல்வியை முடித்து திருச்சி புனித சின்னப்பர் குரு மடத்தில் இறையியல் கற்பதற்காக ஆயரால் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். 1965 இல் 2ம் வத்திக்கான் சங்கம் நடைபெற்று முடிந்திருந்ததால் அன்று இறையியல் ஒரு புதிய திருப்பத்தையும் முனைப்பையும் ஏற்கெனவே பெற்றிருந்தது.

## பணிக்களத்தில் பங்குத்தந்தை

1967 டிசம்பர் 13ம் திகதி அன்று, யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் ஆயர் எமிலியானுஸ்பிள்ளை அவர்களால் திருநிலைப்படுத்தப்பட்டபின், முருங்கன்-உயிலங்குளம் பங்கில் துணைப் பங்குக் குரவராக அவருக்கு முதல் நியமனம் கிடைத்தது. தாம் அங்கிருந்த ஓராண்டுக் காலத்தில் மிகத் தொலைவிலுள்ள அப் பங்கின் 26 கிளைக் கோயில்களையெல்லாம் தரிசித்து அங்குள்ள மக்களின் வாழ்க்கையை ஆராய்ந்து மேலும் சீராக்க முயன்றார். அது மட்டுமல்லாமல் மாதோட்டப் பிரதேசத்தில் இடையிடையே உள்ள பங்குகளைத் தரிசித்து அப் பிரதேசம் முழுவதையும் குறித்து ஆய்வு நடத்தினார்.

அடுத்ததாக சேந்தாங்குளத்தில் அவர் ஈராண்டுகள் துணைப் பங்குக் குருவாக இருந்தபோது புதுமுறையில் சிந்திக்குமாறு மக்களைத் தூண்டினார். மூப்பர்களிடையே இருந்த பிளவுகள் காரணமாக திருச்சபைச் சமூகங்களில் ஏறக்குறைய ஒரு இக்கட்டான நிலை உருவாகி இருந்தது. இளஞ் சந்ததியினர் அற்ப பிரிவினைகளுக்கு ஆளாகாததோடு கூடிய குழு மனப்பான்மை உள்ளவர்களாயிருப்பது கண்டு, அவர்கள் தமது வழி நடத்துதலின் கீழ் பங்குச் செயற்பாடுகளில் முன்னின்று பங்கெடுக்கவும் தலைமைத்துவ வேலைகளிற் தன்னும் ஈடுபடவும் அவர்களுக்கு விட்டுக் கொடுக்குமாறு முதியோரை நெறிப்படுத்தினார். இவ்வாறு பல சமூகங்கள் தமது மந்த நிலையிலிருந்து விடுபட்டு, ஒற்றுமையும் உயிர்த்துடிப்பும் உடையனவாக சான்று பகரவும், பலனளிக்கவும் துணை புரிந்தார். இதுவரை பங்குவாழ்விலிருந்து எட்ட நின்ற இளைஞரும் கூடிய ஈடுபாடு கொள்ளலாயினர்.

மூன்று ஆண்டுகளே பங்கு அனுபவம் பெற்றபின் அவர் உரும்பிராய், சுன்னாகம் பங்கிற்கு பங்குத் தந்தையாக 1971 மே மாதம் நியமிக்கப்பட்டார். மாபெரும் மறை போதகரும், தமிழறிஞருமான நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் மறைத் தளத்தின் பெரும் பகுதியை இப் பங்கு உள்ளடக்கியிருந்தது. இங்கும் அங்கும் மனந்திரும்பிய மக்கள் குழுக்கள் காணப்பட்டன. நிறுவுனரால் தமது "மூத்த புதல்வி" என அழைக்கப்பட்ட பிரதான ஆலயமான உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயமே பங்குக் குருவின் வதிவிடமாயிருந்தது. 1916 நவம்பர் 25ம் திகதி 107 ஞானஸ்நானங்களுடன் நிறுவப்பட்ட இவ்வாலயத்தின்

75 வது ஆண்டு யூபிலி நினைவு மலரில் "பிதா R. ஜோசவ் அவர்களின் மறைப்பணிகளும் மக்கள் நலனுக்காக அவர் எடுத்துக் கொண்ட கரிசனையும் அவர்களது உள்ளத்தில் அவருக்கு ஓர் அழியாத இடத்தைப் பெற்றுக் கொடுத்தன" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதே மலருக்கு அவர் தாமே அளித்த செய்தியில் ஐந்து ஆண்டுகள் அங்கு பங்குக் குருவாகத் தாம் பெற்ற அனுபவம் தமக்கு ஒரு பெரும் அருட்கொடையாக இருந்தது எனக் குறிப்பிட்டுள்ளார். 1932 ஜனவரி 5ம் திகதி பிதா ஞானப்பிரகாசரால் இடப்பட்டு அப்போது ஆயராக இருந்த J. A. கியோமார் ஆண்டகையினால் ஆசீர்வதிக்கப்பட்ட அதே அத்திவாரத்தின் மீது அவர் தற்போதிருக்கும் ஆலயத்தைக் கட்டியெழுப்பினார்.

1974 டிசம்பரிற்குப் பின் பண்டத்தரிப்பு - விளான் பங்குக்கு அவர் பங்குக் குருவாக இருந்த போது சமூகங்களைக் கட்டியெழுப்பினார்; மக்களின் இதயங்களை புதுப்பித்தார்; துன்புற்றோருக்கு ஆறுதலளித்தார்; ஆலயங்களை திருத்தி அமைத்தார்; அத்துடன் கத்தோலிக்க அருங்கொடை இயக்கத்தின் வழியாக தமது சொந்த மனந்திரும்புதலையும், விசுவாச அர்ப்பணத்தையும் புதுப்பிக்க இறைவன் தமக்கொரு சந்தர்ப்பத்தை அளித்ததாகவும் அவர் கூறி உள்ளார். அடிப்படைவாதத்தின் ஊடுருவல்களை அடித்தளத்திலிருந்து எதிர்ப்பதற்காக, கொழும்பு அருங்கொடை இயக்கத்தின் தலைவரான பிதா ஒஸ்கார் அபேரத்ன, யாழ்ப்பாணத்திலும் அது போன்ற ஓர் இயக்கத்தை ஆரம்பிக்கும்படியாக அழைக்கப்பட்டார். அப்போது அதில் ஈடுபட்டிருந்த 15-20 குருக்களிடையேயிருந்து பிதா R. ஜோசவ் யாழ். மறை மாவட்டத்தில் இவ்வியக்கத்தை தொடர்ந்து நடத்தி விரிவடையச் செய்யும் பணிக்காக ஏகமனதாகத் தெரியப்பட்டார். அவரது தாழ்மையான பண்பும், ஆடம்பரமற்ற போக்கும், ஆழமான ஆன்மீகமும் அவருக்கு அனைவரின் ஒத்துழைப்பையும் பெற்றுத் தந்தன. இந்த அனுபவத்தின் மூலமே சீடத்துவம், மன்னிப்பு, வெறுமையாக்குதல் இவை என்ன என்பதை தாம் கற்றுக் கொண்டதாகவும், தம்மை முழுமையாக அர்ப்பணித்து சிலுவையை ஏற்றுக் கொள்ளவேண்டியிருந்தாலும், கிறிஸ்துவைப் பின்பற்றி அவருக்குப் பணி செய்ய அர்த்தமுள்ள விதத்தில் தம்மை அர்ப்பணிக்க கூடியதாக இருந்தது என்றும் அவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

## உயர்கல்வி

நீதி சமூக உணர்வு பற்றிய இயலுணர்வு அவருக்கு ஏற்பட்டதால் இத்துறையில் அவர் மேலும் அறிவு பெற விரும்பினார். இதற்கிடையில் யாழ். விவாக மன்றில் இப் பந்தனத்தின் காவலராக நியமிக்கப்பட்டார். அதிலே அவர் தம்மை ஈடுபடுத்தி திருமணப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் வெற்றி கண்டார். ஏனையவற்றை திருச்சபைச் சட்டத்தின் மனப்பாங்கில் புற வாய்மை வழாதபடி அணுகினார். இதனால் அவரது மேலதிகாரிகள் திருச்சபைச் சட்டத்தில் மேற் படிப்பை மேற்கொள்ளுமாறு அவரை ஊக்குவிப்பது நலம் எனக் கருதினர். அவர் தமது இந்தக் குறிக்கோளை அடைவதற்கு காரணகர்த்தாவாக இருந்தவர் ஆயர் தியோகுப்பிள்ளை ஆவார். 1984ல் ஊர்பான் பல்கலைக்கழகத்தில் அவர் கலாநிதிப்பட்டம் பெற்றார். விசுவாசப் புதுப்பித்தலில் பரிசுத்த ஆவியின் செயற்பாட்டில் அவருக்கிருந்த ஆர்வம், அனுபவம் காரணமாக அவரது ஆராய்ச்சிக் கட்டுரை "உறுதிப்பூசுதல் இலங்கைச் சூழலில் சான்று பகரும் திருவருட்சாதனம்" என்னும் விடயம் பற்றி அமைந்தது. விவாகப் பிரச்சினைகளைத் தீர்ப்பது பற்றிய ஒரு விசேட கல்வி நெறியை மேற்கொண்ட 12 பேரில் இவரே முதன்மையானவராகக் கணிக்கப்பட்டார். தமக்குக் கிடைத்த உதவிப் பணத்தை எதிர்காலத்தில் ஏழைகளிடத்தில் தாம் செய்யப்போகும் பணிக்காக சேமித்து வைத்தார்.

## பேராசிரியர்

1985ல் அவர் இலங்கை திரும்பியபோது யாழ். புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தின் பங்குக் குருவாகவும், புனித பிரான்ஸிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியில் திருச்சபைச்சட்டம், உறுதிப்பூசுதல் கற்பிக்கும் பேராசிரியராகவும் நியமிக்கப்பட்டார்.

பங்கு மக்கள் மத்தியில் இறையுணர்வையும், ஒற்றுமையையும் ஒருவர் மீது ஒருவர் கரிசனையையும் வளர்ப்பதற்காக அவர் பங்கைப் பல பகுதிகளாகப் பிரித்து வாராந்த இல்ல வழிபாடுகளைத் தொடங்கி வைத்தார். பொது நிலையினர் குழுவொன்றை ஏற்படுத்தி அதன் மூலம் பொது நிலையினர் சமூக சேவைபுரிவதை ஊக்குவித்தார். பொருளுதவி கேட்டு வரும் விண்ணப்பங்களெல்லாம் அக்குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு தீர்மானம் எடுக்கப்பட்டதுடன், சகல உதவிகளும் அக்குழு மூலமாகவே செய்யப்பட்டன. 100 வறிய பிள்ளைகள் கல்வி பயில்வதற்குத் துணைபுரியும்படியாக தாம் ஜேர்மனியில் சேர்த்த பணத்தில் பெரும்பாலும் ஒவ்வொருவர் பேரிலும் வங்கிக் கணக்கில் ரூ. 5000/- இட்டு வைத்துள்ளார். நல்லூரில் புனித ஆசீர்வாதப்பரின் பழைய ஆலயம் இருந்தவிடத்தில் நாட்டின் பண்பாட்டுக்கமைய ஒரு புதிய ஆலயத்தைக் கட்டுவித்ததுடன், ஏனைய இரு ஆலயங்களிலும் பல திருத்த வேலைகள் செய்தார். பிறரால் விரும்பத்தக்கவராயும், புரிந்துணர்வுள்ளவராகவும் நம்பிக்கைக்குரியவராகவும் இருந்ததுடன், உதவி தேவைப்பட்டோர் யாவராயினும், குருக்கள் உட்பட, அவரை நாடி வந்து ஆறுதலும், உளவலுவும், வழிகாட்டுதலும் பெற்றுச் சென்றனர். யாரும் கஷ்ட நிலையில் இருப்பதாக கேள்விப்பட்டால் அவர் தாமே அவர்களுக்குக் கைகொடுத்து உதவ முன்வந்தார்.

சராசரியாக வாரத்துக்கொரு வளர்ந்தவருக்கு அவரால் திருமுழுக்களிக்கக் கூடியதாயிருந்தது என்பதிலிருந்து நற்செய்திப் பணியில் அவர் அடைந்த வெற்றி புலப்படுகிறது.

செபமாலைத்தாசர் தியான சபையின் தாபகரான பிதா B. A. தோமஸ் அவர்களின் புனிதர் பட்டத்திற்கான மறை மாவட்ட விசாரணையில் யாழ். ஆயரின் பிரதிநிதியாக அவர் நியமிக்கப்பட்டார்.

தகவல்:
**அருட்திரு பிலிப் பொன்னையா**
எழுதியவர்:
**A. சந்தியாப்பிள்ளை**
தமிழாக்கம்
**செல்வி வயலற் இம்மானுவேல்**

அருட்செல்வி
**சென். ஜெறோம்**
**(எட்வீஜ்அம்மா அருளப்பு)**
**இறைவனில் இணைந்த**
**1ஆம் வருட நினைவு**
**அஞ்சலியும்**
**(19-10-1992)**
துறவற அர்ப்பணத்தின்
**50ஆம் வருட**
**பொன்யூபிலி வாழ்த்துக்களும்**
**18-12-1992**
அருட்சகோதரி அவர்கட்கு
அன்புடன் சமர்ப்பிக்கின்றோம்.



| மலர்வு: | இறைஅர்ப்பணம்: | இறைபதம்: |
|---|---|---|
| 13-06-1922 | 18-12-1942 | 19-10-1991 |

"நித்திய பேரின்ப ஒளி இவர்மேல் ஒளிர்வதாக." நினைவுத் திருப்பலிகள்; 19-10-1992 திருக்குடும்பக் கன்னியர்மடம், பாஷையூர்.

காலை 6.15 மணி புனித அன்னம்மாள் ஆலயம் மானிப்பாய், திருப்பலியில் பங்குபற்ற அன்புடன் வேண்டுகின்றோம்.

பாசமுடன் நினைவுகூரும்.
**நேசச் சகோதரர், குடும்பத்தினர், உறவினர்.**
இளவாலை. A/43/92

## 14ஆம் ஆண்டு நிறைவு தினம்
## 22 — 10 — 1992

### சகல பங்குகளிலும் விசேட வழிபாடுகள்



திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் திருச்சபையின் தலைவராகப் பதவி ஏற்ற 14ஆம் ஆண்டு நிறைவு தினம் இம்மாதம் 22ஆம் திகதி வியாழன் அன்று கொண்டாடப்படுகின்றது.

இலங்கையின் திருப்பீடத் தூதுவர் பேரருள் திரு. பிரான்சுவா பக்கே ஆண்டகையின் வேண்டுகோளுக்கிணங்க, யாழ். மறைவட்டங்களிலுள்ள சகல பங்குகளிலும் வி.சட திருவழிபாடுகள் நடாத்தி, இறைவனுக்கு நன்றி செலுத்தி, பரிசுத்த பாப்பரசர் மேல் இறை ஆசி நிலவ வேண்டுமாறு யாழ். மறைவட்ட அப்போஸ்தலிக்க ஆளுநர் பேரருட்திரு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை விண்ணப்பிக்கின்றார்.

## ‘புதிய உலகில்’ 500ஆம் ஆண்டு விழா
# திருத்தந்தையின் பயணம்

★ கிறிஸ்தோப்பர் கொலம்பஸ் உள்ளடக்கிய ஓர் குழு 1492ம் ஆண்டு அக்டோபர் 12ம் திகதி கரேபியன் தீவுகளில் ஒன்றான டொமினிக்கன் குடியரசில் சென்றிறங்கியது. இதனைத் தொடர்ந்து புதிய கண்டத்தின் கண்டுபிடிப்புகளுடன் அப் பகுதியில் நற்செய்தியும் பரவ ஆரம்பித்தது. இப்பகுதியின் கிறிஸ்துவம் நுழைந்ததன் 500ம் ஆண்டு கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதற்கென கடந்த வெள்ளி (9-10-92) அன்று டொமினிக்கன் குடியரசில் 6 நாள் பயணத்தைத் தொடக்கியுள்ளார் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர்.

★ 10 மணி நேர விமானப் பயணத்தை மேற்கொண்ட 72 வயதான பாப்பிறை டொமினிக்கன் குடியரசின் தலைநகரான சாந்தோ டொமிங்கோவின் விமான நிலையத்தை அடைந்த போது வெள்ளி உள்ளூர் நேரம் மாலை 5-15. (அப்போது இலங்கை நேரம் சனி அதிகாலை 2-45) விமானத்தள வரவேற்பு மேடையில் 86 வயதான அரசுத் தலைவர் பாலகே ஸ்பானிய மொழியில் திருத்தந்தைக்கு வரவேற்புரை வழங்கினார்.

★ இப்பயணத்தின் 2ம் நாளாகிய சனி உள்ளூர் நேரம் காலை 9-45 மணிக்கு (இலங்கை நேரம் சனி மாலை 7-15 மணி) பாப்பிறை தூதுவர் இல்லத் தோட்டத்தில் இளைஞர்களைச் சந்தித்து அவர்களின் பாடல்களில் மகிழ்ந்தார்.

★ 1940 களில் இத்தாலியக் கட்டிடக் கலைஞர் அலெக்ஸ்சாந்திரோ என்பவரால் கட்டப்பட்ட மாளிகையில் ஏறத்தாள 30 நிமிடம் வரை அரசுத் தலைவரைத் தனியே சந்தித்தபின் பிற அதிகாரிகள் மற்றும் பத்திரிகை நிருபர் முன்னிலையில் இரு தலைவர்களும் பரிசுப் பொருட்களைப் பரிமாறிக் கொண்டனர்.

★ ஞாயிறு காலை சாந்தோ டொமிங்கோ பாப்பிறை தூதுவர் இல்லத்திலிருந்து 6 கி. மீ. தொலைவிலுள்ள காராகொலோ என்ற வளாகத்திற்கு திருத்தந்தை திருப்பலி நிறைவேற்ற குண்டு துளைக்காத கண்ணாடியால் ஆன திறந்த காரில் வந்தார். இத்திருப்டலியில் முக்தி பெற்ற ஆயர் எசக்கியேலே மொறினோலவ புனிதர் என அறிவித்தார்.

★ திருப்பலியின் இறுதியில் ஞாயிறு நண்பகல் மூவேளை ஜெபத்தின்போது அன்னை மரியின் பரிந்துரைகளில் லத்தீன் அமெரிக்க கண்டத்திற்கு வேண்டிய திருத்தந்தை கொலம்பஸ் வந்ததன் 500 ஆண்டு கொண்டாட்டத்தை எதிர்த்து எழுந்த கிளர்ச்சியில் அண்மையில் இறந்த இருவருக்காக ஜெபிக்கவும் தவறவில்லை.

★ திருப்பலிக்குப்பின் திருப்பீட தூதரகம் சென்று அகுஸ்தீனார் துறவற சபையின் குழுவைச் சந்தித்து உரையாடினார்.

★ டொமினிக்கன் நேரம் ஞாயிறு மாலை 6 மணிக்கு (இலங்கை நேரம் திங்கள் அதிகாலை 3-30) திருப்பீடத் தூதரகத்தில் டொமினிக்கன் குடியரசுக்கான 28 அயல் நாட்டுத் தூதுவர்களைச் சந்தித்தார்.

★ 4ம் நாள் திங்கள் காலை 9-30 மணிக்கு திருப்பலி நிறைவேற்ற டொமினிக்கன் தலைநகருக்கு வெளியே இருந்த ஒலிம்பிக் மைதானத்திற்கு கெலிகொப்ரர் மூலம் சென்றார். இத்திருப்பலியில் ஆற்றிய மறையுரை கத்தோலிக்க மதிப்பீடுகளுக்கு லத்தீன் அமெரிக்கா திரும்பி வரவேண்டும் என்பதை விண்ணப்பித்ததாக இருந்தது.

★ திங்கள் மாலை 6 மணிக்கு லத்தீன் அமெரிக்க ஆயர் பேரவையின் 4வது பொது அமர்வைத் தொடக்கி வைத்தார் திருத்தந்தை. புதிய நற்செய்தி அறிவித்தல், மனித மேம்பாடு, கிறிஸ்தவக் கலாசாரம் என்ற நோக்குடன் இடம்பெற்ற இப்பொது அமர்வில் 250 ஆயர்கள் உட்பட 350ற்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். நடைபெறும் இப்பொது அமர்வு இம்மாதம் 28ம் திகதி முடிவுக்கு வரும்.

★ 14ம் திகதி புதன் காலை 9 மணிக்கு டொமினிக்கன் குடியரசிற்குமேற்கொண்ட 3 வது பயணத்தை முடித்து டொமினிக்கன் மக்களிடமிருந்து விடைபெற்றார். இப் பயணம் திருத்தந்தையின்56 வது வெளிநாட்டுத் திருப் பயணம் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதிய புனிதர்
## ஆயர் எசெக்கியேலே மொறினோ

டொமினிக்கன் குடியரசின் தலைநகரில் திருப்பயணத்தை மேற்கொண்டுவரும் திருத்தந்தை 2-ம் அருள் சின்னப்பர் ஞாயிறு (11-10-92) காலை 9. 15 மணிக்கு நிறைவேற்றிய திருப்பலி வேளையில் லத்தீன் அமரிக்காவில் மறை பணியாற்றிய ஸ்பானிய ஆயர் எசெக்கியேலே மொறினோவுக்கு புனிதர் பட்டம் வழங்கினார். 40 கர்தினால்கள், ஏறத்தாள 250 ஆயர்கள் திருத்தந்தையுடன் திருப்பலியை நிறைவேற்றினார்கள்.

1848 ஆம் வருடம் ஸ்பெயினில் பிறந்த புதிய புனிதர் எசெக்கியேலே மொறினோ அகுஸ்தீனார் துறவறச் சபையில் இணைந்து முதல் 15 வருடங்கள் பிலிப்பைன்ஸ் நாட்டில் மறைபோதகராக பணியாற்றினார். 1888ஆம் ஆண்டு கொலம்பியா நாட்டிற்கு மறைபோதகராகச் சென்ற இவர் 1893 ஆம் ஆண்டு ஆயராக நியமிக்கப்பட்டார். 1905-ம் ஆண்டு புற்றுநோய் காரணமாக தன் சொந்தநாடான ஸ்பெயினுக்கு திரும்பி அதற்கு மறுவருடம் தன் 58-ம் வயதில் காலமானார். 1975-ம் வருடம் திருத்தந்தை 6-ம் சின்னப்பர் ஆயர் எசெக்கியேலே மொறினோவை முத்தி பெற்றவர் என அறிவித்தார்.

# ஆயர்பணிபுரிய பதவி அமர்வு

## மன்னார்
### 27-10-1992

மன்னார் மறைவட்டத்தின் புதிய ஆயர் பேரருட்திரு இராயப்பு ஞானானந்தர் யோசவ் ஆண்டகை அவர்களின் பதவி அமர்வு வைபவம் யாழ். மறைவட்டத்துக்கு மாற்றலாகியுள்ள ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் சமுகத்தில் எதிர்வரும் 27-10-1992 செவ்வாய்க்கிழமை பி. ப. 4-30 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் இடம்பெறும்.


## யாழ்ப்பாணம்
### 05-11-1992

யாழ். மறைவட்டத்தின் புதிய ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களின் பதவி அமர்வு வைபவம் யாழ். மறைவட்டத்திலிருந்து ஓய்வுபெற்ற ஆயர் பேரருட்திரு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் சமுகத்தில் எதிர்வரும் 05-11-1992 வியாழக்கிழமை பி. ப. 4-30 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இடம் பெறும்.

## நிரம்பியது ஞான ஒளி

இராயப்பு ஞானச்சந்திரன், செட்டிகுளம்.

ஆதவனைப் போலெழுந்து
ஆட்கொள்ளும் ஆசிரியர்
பாதஅர விந்தமலர்
பட்ட இடம் கண்ணொற்றி
வேத நெறி பற்றி விட்டாய்
வேதனையின் வேர்மடியும்
சாதலிலா அமரநிலை
சார்ந்துவிடும் பிறை நிலவில்
கால்பதித்து கர்த்தனையும் கையேந்தி
கானகத்தில் உறை மாது
சித்தமுடன் அகதி யெமை
சீராட்டி வரும் தாயார்
மட்டடங்கா கருணை மழை
மகிழ்ந்துமக்கு தினம் பொழிவாள்
பொங்கு போர்க் காலமதில்
பெரும் பொறுப்பை தந்தை தந்தார்
தாதை தூசையின் பெயரோய்
தாற்பரியம் கண்டுணர்வோய்
பல்லாண்டு பணிபுரிய
பரமபிதா அருள்கூர்வார்
நீண்ட நெடுங்காலம்
நின் சேவை நீடுயர
அன்னை அமலமரி
அனுதினமும் துணையிருப்பாள்



ஞானப்பூ [தங்கை], நட்சத்திரம் [தமையன்], அந்தோனியாப்பிள்ளை [தாய்]
ஞானச்சந்திரன் [தமையன்], அலெக்ஸ்சான்டர் [மைத்துனர்], தோமஸ் [தம்பி]

இரங்குகுண வேந்தன்
இராயப்பரின் புதல்வ
அன்னை அந்தோனியாப் பிள்ளையவர்
அணி ஞானானந்த குரு!
பாயும் அருள் வெள்ளத்தில்
பாழ்தத மரம் பூக்குலுங்கும்
வாயுரைக்கு வல்ல தலை
வாழிநின்றன் மேன்மையெலாம்
சித்தத்தின் களை விலக்கிச்
செழுங்கருணைப் புனல் பாய்ச்சி
அத்துவிதக் கனி பழுக்கும்
அரியதரு வார்க்கிறை
வித்தகரே! இசைபொங்கும்
வீணையொலித் தண் குரலில்
தத்துவத்தேன் மழை பொழியும்
தகை மிக்கோய்! அஞ்சலிகள்
ஓங்கி வளர் மரம் முதலில்
ஒரு சிறிய வித்துக்குள்
தூங்குவதைப் போலே யாம்
துயின்றிருந்தோம் கருணைமனப்
பாங்கிலுயிர் விழிப்பூட்டும்
பரம தந்தை ஜோதியினால்
நீங்கியதெம இருள் வினைகள்
நிரம்பியது ஞான ஒளி

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1992 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. இல. QB/1001/58/81